INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

## ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு

# பணிக் கையேடு

::: ஆக்கம் :::


"ராமன் மகசேசே" **குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் – தலைவர், ஐ.வி.டி.பி.


IVDP
SINCE 1979

# ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு பணிக் கையேடு

வெளியீடு : ஆகஸ்டு 2021

**இது பொது வெளியீடு அல்ல**

ஐ.வி.டி.பி. நிறுவன பணியாளர்கள், மேற்பார்வையாளர் மற்றும் ஊக்குனர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்.
இந்நூலில் உள்ள கருத்துக்கள் யாவும் ஐ.வி.டி.பி. நிறுவனத்தால் உருவாக்கப்பட்டவையாகும்.
எனவே மறு உருவாக்கத்திற்கு முன்அனுமதி தேவை.

தலைமை அலுவலகம்
நெ. 9ஈ, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி – 635 001 தமிழ்நாடு, இந்தியா

+91 4343-232129, 236420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org

எல்லாம் புகழும்

# இந்திய பெண்களுக்கே!

# நிறுவனர் இதயத்திலிருந்து...

**அன்பு சுயஉதவிக் குழு ஊக்குனர்களே!**
**அனைத்து நிலை பொறுப்பாளர்களே!**

வாழ்த்துக்களும்! வணக்கங்களும்!!


ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் பணிக் கையேட்டை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். விதிமுறைகளும், முறையான சட்டத்திட்டங்களும் இல்லாத சமுதாயம் கடிவாளம் இல்லாத குதிரை போன்றது. நம்மைப் போன்ற நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். எனவே தான் நமது வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களை தோற்றுவித்து நடத்தியதின் 41 ஆண்டு கால அனுபவங்களைக் கொண்டு, ஒரு சுய உதவிக் குழு எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு சில நெறிமுறைகளை வகுத்துள்ளோம். அந்நெறிமுறைகளை நாம் சோதித்தும் பார்த்துள்ளோம். முறையாக வகுக்கப்பட்ட நெறிமுறைகள் ஒரு சுய உதவிக் குழுவை திறம்பட நிர்வகிக்கவும், செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையையும், குழு உறுப்பினர்களின் சுய சார்புத் தன்மையையும் உறுதி செய்யும் என்பதில் ஐயமில்லை.

நமது ஐ.வி.டி.பி.யில் அனைத்து நிலைகளிலும் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் இக்கையேட்டை ஆழமாக படித்து நெறிமுறைகளை உள்வாங்கி அதற்கேற்ப நமது குழுக்களை வழிநடத்தினால் நாம் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளையும், சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள இயலும்.

எனவே நீங்கள் வருங்காலங்களில் உங்களது குழுக்களை வழி நடத்தும் போதும், பணித்தளங்களிலும், பயிற்சிகளிலும் இக்கையேட்டை பயன்படுத்தி உங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இக்கையேட்டை முழுமையாக பயன்படுத்தி உங்கள் பணியை மென்மேலும் மெருகூட்டிக் கொள்ள உங்களை வேண்டுகிறேன். அப்போது தான் நம் இலக்கான, ஒவ்வொரு விளிம்பு நிலையில் வாழும் மகளிரையும் குழுவாக ஒருங்கிணைத்து பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக மாற்ற இயலும். எனவே நமது பணிகளில் நேர்த்தியும், தொழில் முறை அணுகுமுறையும் கொண்டு பணியாற்றுவோம், அப்போது நாமும் நம் நிறுவனமும் இணைந்து வளர்வோம் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்கள்.



என்றும் மக்கள் பணியில்

"ராமன் மகசேசே"
**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் – தலைவர்

# பொருளடக்கம்

## அத்தியாயம் - 1


1. ஐ.வி.டி.பி–யின் தோற்றமும், வளர்ச்சியும் ..... 009
2. ஐ.வி.டி.பி. பெற்ற விருதுகள் ..... 019
3. ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் அமைப்பு ..... 020


## அத்தியாயம் - 2


4. ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பும் செயல்பாடுகளும் ..... 021
5. சுய உதவிக் குழுக்கள் என்றால் என்ன? ..... 023
6. ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கும் முறை ..... 024
7. ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு செயல்பாடுகளை கண்காணித்தல் ..... 026
8. ஊக்குனர்கள் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புகளும் ..... 028
9. குழு பிரதிநிதிகளின் பொறுப்புகள் ..... 030
10. குழு உறுப்பினர்களின் பொறுப்புகள் ..... 030
11. குழு சேமிப்பு ..... 031
12. புதிய சுய உதவிக் குழுக்கள் ..... 033
13. புதிய சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி ..... 035
14. பழைய சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சிகள் ..... 036
15. பயிற்சி நடத்துவதிலுள்ள படிநிலைகள் ..... 037
16. ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழு கூட்டங்கள் ..... 038
17. முதல் குழுக் கூட்டத்தின் சிறப்பு அம்சங்கள் ..... 038
18. முதல் குழுக்கூட்டம் நடத்தும் முறை அல்லது படிநிலைகள் ..... 039
19. முதல் குழுக்கூட்டத்திற்குப் பிறகு செய்ய வேண்டியவைகள் ..... 040
20. இரண்டாவது குழுக்கூட்டத்தின் சிறப்பம்சங்கள் ..... 040
21. இரண்டாவது குழுக்கூட்டம் நடத்தும் முறை அல்லது படிநிலைகள் ..... 041
22. இரண்டாவது குழுக்கூட்டத்தின் பிற முக்கிய அம்சங்கள் ..... 042
23. ஊக்குனர்கள் ஆய்வுக் கூட்டம் ..... 043
24. பணியாளர்கள் ஆய்வுக் கூட்டம் ..... 045
25. உறுப்பினர்களுக்கு உள்ள பல்வேறு வகைக் கடன் வசதிகள் ..... 046
26. சங்கக் கடன் ..... 047
27. சங்க சிறப்புக் கடன் ..... 050
28. ஐ.வி.டி.பி. கடன் ..... 053
29. வங்கிக் கடன் ..... 055

# பொருளடக்கம்


30. வங்கிக் கடன் மதிப்பீடு செய்தல் .................... 059
31. ஊக்குனர்களுக்கான வங்கிக் கடன் மேலாண்மை பயிற்சி .................... 060
32. சுய உதவிக் குழுக்களுக்கான பதிவேடுகள் .................... 060
33. சுய உதவிக்குழுக்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் .................... 060
34. தீர்மானப் புத்தகம் .................... 061
35. சங்கக் கடன் பதிவேடு மற்றும் சிறப்புக் கடன் பதிவேடு .................... 067
36. ஐ.வி.டி.பி. மற்றும் வங்கிக் கடன் பதிவேடு .................... 068
37. கடன் வழங்கல் பதிவேடு .................... 069
38. தனி நபர் சேமிப்பு புத்தகம் .................... 070
39. சுய உதவிக்குழுக்கள் ஆவணங்கள் ஆய்வு செய்தல் .................... 071
40. கணக்கு மற்றும் தணிக்கை .................... 072
41. தணிக்கை .................... 074
42. ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு தணிக்கை தர மதிப்பீட்டு படிவம் 2020-2021 .................... 076
43. குழுக்களின் தரநிலை .................... 077
44. குழுக்களின் கணினிமயமாக்கம் .................... 078
45. மகளிர் சுய உதவிக்குழு ஒப்பந்த கடிதம் .................... 080

## அத்தியாயம் - 3

46. ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்களின் தொகுதியளவு கூட்டமைப்பு .................... 082
47. தொகுதியளவு கூட்டமைப்பின் சேவைகள், பணிகள் .................... 083
48. தொகுதியளவு கூட்டமைப்பு நிதி நிர்வாகம் .................... 084

## அத்தியாயம் - 4

49. சுய உதவிக்குழுக்களின் சிறப்பு அம்சங்கள் .................... 085
50. குழு வைப்பு நிதி .................... 086
51. இலாபப் பங்கீடு .................... 087
52. வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி .................... 089
53. சுய உதவிக்குழுக்கள் உறுதிமொழி .................... 091
54. ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நலத்திட்டங்கள் .................... 092
55. ஐ.வி.டி.பி. கோசலை தங்கப் பதக்க விருது .................... 092
56. குடிசை தீ விபத்து நிவாரண நிதி .................... 093
57. விதவை உறுப்பினர் குழந்தைகளுக்கு கல்லூரி கல்வி உதவித் தொகை .................... 094
58. ஐ.வி.டி.பி. யின் நலத்திட்டப் பணிகள் .................... 095




# "மாற்றத்தை நோக்கி"

### தொலை நோக்குத் திட்டம்

சாதி, மத பாகுபாடில்லாத சமூக பொருளதார முன்னேற்ற செயல்பாடுகள் மூலம் ஏழை மகளிர் மேம்பாட்டிற்காக பாடுபடுதல்.

### குறிக்கோள்

மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மகளிரை ஒருங்கிணைந்து, வலுப்படுத்தி, அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் சமூக பொருளாதார மற்றும் சுகாதார முன்னேற்றம் அடைய செய்வது.

### செயல்முறைத் திட்டம்

ஏழை மகளிருக்கு சமூக பொருளாதார மற்றும் சுகாதார ரீதியிலான திட்டங்களை வழங்கி அவர்களுடைய துன்பங்களைப் போக்கி அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

# அத்தியாயம்

01


## ஐ.வி.டி.பி-யின் தோற்றமும் வளர்ச்சியும்



ஐ.வி.டி.பி என சுருக்கமாக அழைக்கப்படும் '**ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்**' என்ற இம்மந்திரச்சொல் இன்று இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட விளிம்பு நிலையில் வாழும் குடும்பங்களில் விளக்கேற்றி, அல்லும் பகலும் அருந்தொண்டாற்றி வருவது அனைவரும் நன்கறிவர்.

# ஐ.வி.டி.பி-யின் தோற்றமும் வளர்ச்சியும்

ஐ.வி.டி.பி.யின் இன்றைய வளர்ச்சி எப்படி சாத்தியமாயிற்று?
இதற்கு ஒரே பதில் திரு. குழந்தை பிரான்சிஸ் என்ற
தொலைநோக்கு பார்வை கொண்ட ஒரு தனிமனிதரின் இமாலய உழைப்பு,
தியாகம், சமூக அக்கறை, வெளிப்படைத் தன்மை, நேர்மை
மற்றும் மனித நேயம் மட்டுமே!




**யார் இவர்?**

1946

### இளமைப் பருவம்

- சேலம் மாவட்டத்தின் காரிப்பட்டி அருகிலுள்ள மின்னாம்பள்ளி அக்ரஹாரம் என்ற சிற்றூரில், 1946ஆம் ஆண்டு திரு. குழந்தை, திருமதி. மதலைமேரி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.
- இளமையிலேயே இயல்பாகவே அனைவருக்கும் பணிபுரிவதில் நாட்டமும், அதற்காக தன்னையே அர்ப்பணிக்கவும் துணிவு கொண்டார்.
- தனது ஆரம்ப கல்வியை நெய்வேலி அருகிலுள்ள குணம் குறிச்சி என்ற ஊரிலும், உயர்நிலைக்கல்வியை சேலம் நகரிலும் பயின்றார்.

கல்வியின் மேல் இருந்த ஆர்வத்தைக் கண்ட இவரது பெற்றோர், தங்களுக்கிருந்த சிறு விவசாய நிலத்தையும் விற்று இவரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்க்க, அங்கு இளங்கலை வணிகவியல் கற்றுத் தேர்ந்தார்.

முன்பே குறிப்பிட்டவாறு பிறரன்பு சேவையில் நாட்டம் கொண்ட இவர் மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் சேவை புரியும் எண்ணத்தோடு ஹோலி கிராஸ் சபையில் தன்னை இணைத்துக்கொண்டு புனே நகரிலும், ஏற்காட்டிலும் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

இதனிடையே அப்போது நடைபெற்ற பங்களாதேஷ் போரில் புலம் பெயர்ந்த அகதிகளுக்கு மருத்துவ சேவையாற்ற கிடைத்த வாய்ப்பைப் பெற்று அர்ப்பணிப்போடு பணியாற்றினார். இக்கொடிய போர் சூழலில் இவர் உயிர் பிழைத்தது பேரதிசயமே.



▼

## புதிய ஆரம்பம்


1975

தனது ஆன்மீகக் கல்வியின் ஒரு பகுதியாக 1975 ஆம் ஆண்டு களப் பயிற்சிக்காக, கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஒன்றியத்திலுள்ள நாட்றாம்பாளையம் வன கிராமத்திற்கு திரு. குழந்தை பிரான்சிஸ் அனுப்பப்பட்டார். அங்கு மக்கள் படும் இன்னல்களை கண்ணுற்று அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட முடிவு செய்து ஹோலி கிராஸ் சபையிலிருந்து தன்னை விடுவித்து கொண்டு தன் சமூகப் பணிகளை துவக்கினார்.

இதுவே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட ஒரு புதிய ஆரம்பம் என்றால் மிகையாகாது.

# திருப்புமுனை

## 1979







சமூகப் பணிக்கு முழுவதும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இவர் நாட்றாம்பாளையம் அருகிலுள்ள சேசுராஜபுரம் என்ற குக்கிராமத்திற்குத் திரும்பிய பின் 1977ஆம் ஆண்டு ஒரு ஓட்டு வீட்டை வாடகைக்கு எடுத்து தனது பணியைத் தொடர்ந்தார். பொங்கி வரும் காவிரியில் பரிசல் மூலம் பயணம் செய்து கொடிய விலங்குகள் வாழ்ந்த காடுகளுக்குள் பல மைல் தூரம் நடந்து சென்று இரவுப் பள்ளிகளையும், முதலுதவி மையங்களையும் நடத்தினார்.

இவ்வாறு சமூகப் பணியில் நாட்டம் கொண்டு ஆன்மீகப் பணியை துறந்த திரு. குழந்தை பிரான்சிஸ், தான் தேர்ந்து கொண்ட சமூகப்பணிக்கு தன்னையே தயார் செய்து கொள்ளும் பொருட்டு, திருச்சியிலுள்ள சமூக மேம்பாட்டு மையத்தில் ஓராண்டு பயிற்சியை நிறைவு செய்து மீண்டும் களப்பணிக்கு திரும்பினார். தனது சமூகப்பணியை முறைப்படுத்த எண்ணிய அவர் 1979 ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி. நிறுவனத்தை தமிழக அரசின் சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்தார். பின் 1985ல் கனடா நாட்டின் கோடி (CODI) சர்வதேச சமூகப் பணி மையத்தில் சேர்ந்து சமூக பணி தொடர்பான சிறப்புக் கல்வியையும் பயின்றார்.

1996ல் பிலிப்பைன்ஸ் நாட்டில் கிராமிய மேலாண்மை (RURAL MANAGEMENT) குறித்த கல்வியையும் பயின்றார்.


# தடுப்பணைகள்

1981

தான் பணிபுரிந்த பகுதி வனப்பகுதிகள் சூழ்ந்த, மேடு பள்ளங்கள் நிறைந்த பகுதிகள் என்பதாலும், மழைநீரை சேமிக்க இயலாமல், மக்கள் குடிநீருக்கும், கால்நடைகளுக்கும், விவசாயத்திற்கும் போதிய நீரின்றி உணவுப்பஞ்சம் ஏற்பட்டு புலம் பெயர்ந்து செல்வதை அறிந்த இவர் 331க்கும் மேற்பட்ட சிறிய மற்றும் பெரிய அளவிலான தடுப்பணைகளை கட்டினார். வீணாக ஓடிய நீரை முறைப்படுத்தியதன் விளைவாக அப்பகுதியில் நீர்மட்டம் உயர்ந்து குடிநீர் தட்டுப்பாடு நீங்கி மக்கள் பெற்ற நன்மைகள் ஏராளம்.

இன்றும் அப்பகுதியில் சிறப்புடன் நீரை சேமித்து நிற்கும் தடுப்பணைகளே இதற்கு சான்று.







# குடிசையிலிருந்து ஓட்டு வீட்டிற்கு

இவ்வாறு தனது சமூகப் பணியின் ஒரு பகுதியாக 2000க்கும் மேற்பட்ட குடிசை வீடுகளின் மேற்கூரையை அகற்றி அவற்றை ஓட்டு வீடுகளாக மாற்றி அம்மக்கள் சிறந்ததொரு வாழ்விடம் பெறவும் வழிவகுத்தார்.

## சுய உதவிக் குழுக்கள்

1985

வறுமையில் வாழும், விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, அவர்களை குழுக்களாக ஒருங்கிணைப்பதே சிறந்த தீர்வு என நம்பிய திரு. குழந்தை பிரான்சிஸ், 1979ஆம் ஆண்டு நாட்றாம்பாளையம் பகுதியில் ஆண்களுக்கான சுய உதவிக் குழுவைத் துவங்கினார். ஆனால் அது எதிர்பார்த்த பயன்களை அளிக்காத காரணத்தால் ஆண்களுக்கான சுய உதவிக் குழுக்களை நிறுத்திவிட்டு மகளீருக்கான சுய உதவிக் குழுக்களை துவங்கினார்.



அப்பகுதியில் 1985ஆம் ஆண்டு துவங்கப்பட்டு இன்றும் செயல்படும் அன்னை வேளாங்கண்ணி சுய உதவிக் குழுவே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களால் துவங்கப்பட்ட முதல் சுய உதவிக் குழுவாகும். அக்குழுவை அவர் துவங்கும் போது அக்குழுவின் முதல் சேமிப்பு 50 பைசாவாகும்.

அதன்பின் 1989ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் மகளிர் மேம்பாட்டுத் திட்டம், IFAD போன்ற நிறுவனங்களின் உதவியுடன் சுயஉதவிக் குழுக்கள் மாபெரும் வளர்ச்சி கண்டது.

# ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி கோட்டையூர்

2001




மகளிர்மேம்பாட்டுப்பணிகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவந்த திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவானதே மலைவாழ் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியை வழங்கும் பள்ளியை துவங்கும் திட்டமாகும்.

2001ஆம் ஆண்டு அவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து அஞ்செட்டி அருகிலுள்ள வனப்பகுதியான கோட்டையூரில் துவங்கப்பட்ட ஐ.வி.டி.பி நேதாஜி துவக்கப் பள்ளி, இன்று மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு 500க்கும் மேற்பட்ட மலைவாழ் குழந்தைகளுக்கு தரமான ஆங்கிலக் கல்வியை அளித்து வருகிறது.




# இளைஞர் மற்றும் மகளிருக்கான கணினி பயிற்சி மையம் அனுமந்தபுரம்

2002




இளைஞரும், மகளிரும் தங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்வதற்காகவும், தங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களால் துவங்கப்பட்டதே அனுமந்தபுரத்தில் உள்ள ஐ.வி.டி.பி. கணினி பயிற்சி மையம். இம்மையத்தில் ஓராண்டு கணினி பட்டய பயிற்சிகளும், ஆங்கில இலக்கணம் மற்றும் பேச்சுத்திறன் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.




# புதிய தலைமை அலுவலகம்

## 2012

ஐ.வி.டி.பி.–யின் பணிகளை
திறம்பட செய்யவும்,
அதிகரித்து வரும்
சுய உதவிக்குழுக்களுக்கு
தரமான சேவைகளை வழங்கவும்,
கிருஷ்ணகிரி சாந்தி நகரில்
அனைத்து வசதிகளையும்
கொண்ட ஐ.வி.டி.பி.
தலைமை அலுவலகம்
2012ஆம் ஆண்டு
திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.








# "இராமன் மகசேசே" சர்வதேச விருது

## 2012

திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் அனைத்து பணிகளுக்கும் மணிமகுடமாய் இவரின் அயராத உழைப்பிற்கும், தன்னலமற்ற சேவைகளுக்கும் ஒரு சர்வதேச அங்கீகாரமாக, ஆசியாவின் நோபல் பரிசு எனப்படும் பிலிப்பைன்ஸ் அரசு வழங்கும் **இராமன் மகசேசே விருது 2012**ஆம் ஆண்டு இவரைத் தேடி வந்தது.

இது அவருக்கு மட்டுமல்ல, இந்திய பெண்கள் அனைவருக்கும் கிடைத்த மாபெரும் கௌரவமாகும். இதைத் தவிர்த்து இவர் பெற்ற தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகளும் பரிசுகளும் இவரின் சிறந்த பணிகளுக்கு கட்டியம் கூறுகின்றன.

# ஐ.வி.டி.பி. பெற்ற விருதுகள்...

## உலகளவில்

- ராமன் மகசேசே விருது – 2012
- உலக வாழ்வாதார விருது – 2010

## தேசிய அளவில்

- 2004 பாங்க் ஆப் இந்தியா – Excellence Award 2004
- 2014 பாங்க் ஆப் பரோடா – "The Baroda Sun" Life Time Achievement Award
- இந்தியன் வங்கி – Women Empowerment and Rural Development Award
- பல்லவன் கிராம வங்கி – Women Empowerment and Rural Development Award
- இந்தியன் வங்கி – சமூக பங்களிப்புக்கான விருது

## மாநில அளவில்

- 2001-02 நபார்டு வங்கி – இரண்டாம் நிலை விருது
- 2002-03 நபார்டு வங்கி – இரண்டாம் நிலை விருது
- 2003-04 நபார்டு வங்கி – முதல் நிலை விருது
- 2004-05 நபார்டு வங்கி – இரண்டாம் நிலை விருது
- 2005 பாரத ஸ்டேட் வங்கி – State Performance Award
- 2005-06 நபார்டு வங்கி – முதல் நிலை விருது
- 2006-07 நபார்டு வங்கி – முதல் நிலை விருது
- 2007-08 நபார்டு வங்கி – இரண்டாம் நிலை விருது

## மாவட்ட அளவில் (கிருஷ்ணகிரி & தர்மபுரி மாவட்ட அளவில்)

- 2003-04 SGSY முதல் நிலை விருது
- 2004-05 இந்தியன் வங்கி சிறப்பு விருது.
- 2005-06 அதியமான் கிராம வங்கி – SHG Performance Award

## மற்ற விருதுகள்

- 2011-12 Man of Zeal and Inspiration : Moreau Award from the FATHERS OF HOLY CROSS, Bengaluru
- 2013-14 கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம் - Life Time Achievement Award
- 2013-14 Life Achievement Award by Rotary Club of Coimbatore Town

# ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் அமைப்பு

**கீழ்க்கண்ட மேலாண்மை அமைப்பு மூலம் ஐ.வி.டி.பி.-யின் பல்வேறு வகையான செயல்பாடுகள் நடைபெறுகின்றன.**

**நிறுவனர் தலைவர்**

- ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகம்
  - அலுவலகப் பொறுப்பாளர்
    - ஐ.வி.டி.பி. கணக்காளர்
      - தொகுதியளவு கூட்டமைப்பு கணக்காளர்
        - கணக்கியல் உதவியாளர்
          - வரவேற்பாளர்
            - அலுவலக பணியாளர்
- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு
  - ம.சு.உ.கு ஒருங்கிணைப்பாளர்
    - பகுதி மேற்பார்வையாளர்
      - தொகுதியளவு கூட்டமைப்பு பொறுப்பாளர்
        - அலுவலக உதவியாளர்
          - கள மேற்பார்வையாளர்
            - சுய உதவிக் குழுக்கள் ஊக்குநர்
              - சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்
- ஐ.வி.டி.பி. பயிற்சி
  - பயிற்சி ஒருங்கிணைப்பாளர்
    - பயிற்சி அளிப்பவர்
- ஐ.வி.டி.பி. மென்பொருள் பிரிவு
  - மென்பொருள் நிர்வாகம்
    - மென்பொருள் மேற்பார்வையாளர்
- ஐ.வி.டி.பி. கல்விப் பணி
  - ஐ.வி.டி.பி. நேதாஜி மெட்ரிக் பள்ளி
    - நிர்வாக அலுவலர்
      - முதல்வர்
        - ஆசிரியர்கள்
          - அலுவலக பணியாளர்கள்
  - ஐ.வி.டி.பி. கணிணிக் கல்வி மையம்
    - ஒருங்கிணைப்பாளர்
      - ஆசிரியர்கள்
        - அலுவலகப் பணியாளர்கள்

# அத்தியாயம்

02

# ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைப்பும் செயல்பாடுகளும்

(Structure and Operational Procedures)



### ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்களின் வளர்ச்சி

- மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மகளிரை ஒருங்கிணைத்து வலுப்படுத்தி அவர்களையும் அவர்கள் குடும்பங்களையும் சமூக பொருளாதார மற்றும் சுகாதார முன்னேற்றம் அடையச் செய்வது.

- ஐ.வி.டி.பி. 1989 முதல் 1997 வரை **(IFAD)** உலக அளவிலான திட்டத்தின் கீழ் இந்தியன் வங்கியுடன் இணைந்து தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டது.
- ஐ.வி.டி.பி. 1997 முதல் 2003 வரை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் உதவியுடன் மகளிர் சுய உதவிக் குழுக்களை நடத்தியது.
- 2004 ஆம் ஆண்டில் இருந்து ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்திலிருந்து வெளியேறி தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட்டு வருகிறது.
- அதன்பிறகு குழுக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் தற்போது தமிழ்நாடு கிராம வங்கி, பாங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் வங்கி போன்ற வங்கிகள் உதவியுடன் ஐ.வி.டி.பி. மகளிர் குழுக்கள் செயல்பட்டு வருகிறது.
- உறுப்பினர்கள் தம் குடும்பத்திற்கு தேவையான சேமிப்பு, சங்க கடன், வங்கிக் கடன், ஐ.வி.டி.பி கடன் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டக் கூடிய சுயதொழில் துவங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளனர்.
- கந்துவட்டி போன்ற தனியார் வட்டி வியாபாரம் ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படும் பகுதிகளில் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.
- மார்ச் 2021 வரை 14,676க்கும் மேலான ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்கள் சிறப்பாக இயங்கி வருகிறது. 74 தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகங்கள் நிறுவப்பட்டு அவற்றின் கீழ் அனைத்துக் குழுக்களும் செயல்பட்டு வருகிறது.
- மகளிர் குழுக்களுக்கான அடிப்படைக் கருத்துக்கள், ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி, உறுப்பினர்கள் பயிற்சி மற்றும் கணக்கு மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு பயிற்சி, குழு ஒப்பந்த பயிற்சி, ஆளுமை பண்பு பயிற்சி போன்ற பயிற்சிகள் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் அவர்கள் தங்களை வறுமையிலிருந்து மீட்டுக்கொள்ளவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நீடித்த நிலைத்த தன்மையடையவும் பெரிதும் பயன்படும்.
- உறுப்பினர்கள் பெறும் கடன் தொகையில் பெரும் பகுதி வீடு கட்டவும், தம் குழந்தைகள் கல்விக்காகவும், சிறுதொழில்கள், விவசாயம் மற்றும் திருமணம் மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

# சுய உதவிக் குழுக்கள் என்றால் என்ன?

ஒரு கிராமத்தை சார்ந்த 18 முதல் 55 வயதுக்குட்பட்ட குறைந்தது 12 முதல் 20 வரை ஒருமித்த கருத்து கொண்ட மகளிர் குழுவாக இணைந்து, சமூக பொருளாதார மற்றும் சுகாதாரத்தில் நிரந்தரமான முன்னேற்றம் அடைதல்.

### சுய உதவிக்குழுவில் உறுப்பினராகுவதற்கான தகுதிகள்

- ✓ வறுமைக் கோட்டிற்க்கு கீழ் உள்ள மகளிர்
- ✓ மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்
- ✓ திருநங்கைகள்
- ✓ 18 முதல் 55 வயதுக்குட்டபட்ட மகளிர்
- ✓ ஒரு குழுவில் ஒரு குடும்பத்தை சார்ந்த ஒருவர் மட்டும் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- ✓ ஐ.வி.டி.பி யின் மற்றொரு குழுவில் வேண்டுமானால் அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொருவர் உறுப்பினராகலாம்.
- ✓ சகிப்புத்தன்மை, ஒருங்கிணைக்கும் மனப்பான்மை கொண்ட மகளிர்
- ✓ ஐ.வி.டி.பி யின் விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படும் மகளிர்.

### மகளிர் குழுக்களின் அமைப்பு முறை


- ஊக்குனர் (அனிமேட்டர்)
- முதல் பிரதிநிதி
- 2வது பிரதிநிதி
- உறுப்பினர்கள் (12 முதல் 20 வரை)

### நோக்கங்கள்

- சாதி மத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் செயல்பட ஊக்குவித்தல்
- உறுப்பினர்களிடையே தன்னம்பிக்கையை உண்டாக்குதல்.
- உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு குழுவை மேம்படுத்துதல்.
- உறுப்பினர்களிடையே சேமிப்பு மற்றும் நிதி சார்ந்த பழக்க வழக்கங்களை ஊக்குவித்தல்.
- உறுப்பினர்களிடையே கூட்டு பொறுப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மகளிர் நலன் மற்றும் வளர்ச்சி சார்ந்த விசயங்களில் உறுப்பினர்கள் தங்களது பொறுப்புணர்வை ஏற்கத் தூண்டுதல்.
- ஒவ்வொரு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்க உதவுதல்.
- சுய சார்பற்ற தன்மையை உருவாக்குதல்
- உடல் நலன் மற்றும் சுகாதாரத்துடன் கூடிய சமூக பொருளாதார முன்னேற்றம் கொண்டுவருதல்.

# ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கும் முறை

- மகளிர் சுய உதவிக்குழு தொகுதியளவு கூட்டமைப்பின் பணியாளர்கள் கிராமங்களுக்குச் சென்று மகளிருடன் கலந்து பேசுகிறார்கள்.
- மகளிர் குழு பற்றியும், ஒவ்வொரு உறுப்பினர் அவர் சார்ந்த குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்கிறார்கள்.
- ஒரே பகுதி மற்றும் ஒரே கிராமத்தை சார்ந்த குறைந்தது 12 முதல் 20 பெண்களைச் சேர்த்து ஒரு மகளிர் சுய உதவிக்குழு உருவாக்கப்படுகிறது.
- அவர்களுக்குள் ஒரு ஊக்குனரையும் ஒன்று (அ) இரண்டு பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- புதியதாக துவங்கப்பட்ட குழுவிற்கு, குழு உறுப்பினர்களின் ஒட்டுமொத்த விருப்பத்திற்கிணங்க பெயர் தேர்வு செய்யப்படும்.



- குழு உறுப்பினர்கள் தங்கள் குழுவுக்கு தேவையான வங்கி கணக்கை துவங்கும் பொருட்டு, வங்கியையும் தேர்வு செய்தல்.
- குழுவின் செயல்பாடுகளை தொகுதியளவு கூட்டமைப்பின் பணியாளர்கள் தொடர்ந்து கண்காணிப்பார்கள்.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் உதவியுடன் அருகிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் குழுக் கணக்கு துவங்குகிறார்கள்.
- குழுக்கள் தங்கள் வரவு செலவு கணக்குகளை சரிபார்க்கவும் ஒருவருக்கொருவர் குழுக்கள் பற்றி கலந்துரையாடவும், குழுக்களின் தேவைகளை மாதந்தோறும் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் பூர்த்தி செய்து கொள்ள தீர்மானம் போடவும் ஊக்குனர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.
- புதிய குழுக்களின் வளர்ச்சிக்கு தேவையான நான்கு வகையான பயிற்சிகள் மற்றும் பதிவேடுகள் ஒரு வருடத்திற்குள் இலவசமாக வழங்கப்படுகிறது.
- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக் கூட்டம் நடத்தும் முறையைப் பற்றி பணியாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது.
- தொகுதியளவு கூட்டமைப்பு மேற்பார்வையாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள், வங்கி மேலாளர்கள் குழு உறுப்பினர்களின் முன்னிலையில் குழுக்களுக்கு வங்கி கடன் வழங்குதல் தொடர்பாக அப்ரைசல் (தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல்) செய்கின்றார்கள்.
- கடன் பெறும் உறுப்பினர்கள் சரியான முறையில் திருப்பி செலுத்துவதை உறுதி செய்கிறார்கள்.
- தொகுதியளவு கூட்டமைப்பிற்கு குழுக்கள் ஆண்டு சந்தா செலுத்துவதை உறுதி செய்கிறார்கள்.
- வங்கிக்கடன் மற்றும் இதர வெளிக்கடன் பெறும் உறுப்பினர்கள் குழு பங்களிப்பு நிதி செலுத்துவதை உறுதி செய்தல்.
- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி திட்டத்தில் உறுப்பினர்கள் சேர்வதை உறுதி செய்தல்.

# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு செயல்பாடுகளை கண்காணித்தல்

- தொகுதியளவு கூட்டமைப்பின் உதவியுடன், ஐ.வி.டி.பி. குழுக்களின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

- முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஒருவரும், பகுதி மேற்பார்வையாளர்களும் கண்காணிப்புக் குழுவில் அடங்குவர்.


- வாரம் ஒரு முறை மேற்பார்வையாளர்கள் தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்று முதன்மை ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பிப்பர். முதன்மை ஒருங்கிணைப்பாளர் தான் பெற்ற அறிக்கையை சரிபார்த்து ஐ.வி.டி.பி. தலைவரிடம் சமர்ப்பிப்பார்.

- 15 நாட்களுக்கு ஒரு முறை ஐ.வி.டி.பி. தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர் கூட்டத்தில் முதன்மை ஒருங்கிணைப்பாளர் சமர்ப்பித்த அறிக்கை ஆய்வு செய்யப்படும்.

- ஒவ்வொரு மாத இறுதியிலும் ஐ.வி.டி.பி. தலைவர் அவர்களின் தலைமையிலும் வழிகாட்டுதலிலும் கள மேற்பார்வையாளர்கள் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் மாதாந்திர அறிக்கை கலந்தாய்வு செய்யப்பட்டு பிரச்சனைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை தீர்க்க வழிவகை செய்யப்படுகிறது.

## ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு செயல்பாடுகளை கண்காணித்தல்

**செயல்வழிப் படம்**




**ஒவ்வொரு தொகுதியளவு கூட்டமைப்பிலும் 100 முதல் 250 சுய உதவிக்குழுக்களும் ஒவ்வொரு 65 சுய உதவி குழுக்களுக்கு ஒரு முழு நேர கள மேற்பார்வையாளரும் இருப்பர்...**



# சுய உதவிக்குழுக்களின் ஊக்குனர்கள் பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புகளும்

## ஊக்குனரின் பொறுப்புகள்

- குழுவின் வங்கிக் கணக்கைப் பராமரித்தல்.
- மாதம் இருமுறை குழுக்கூட்டத்தை நடத்துதல்.
- குழு உறுப்பினர்கள் அனைவரையும் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்தல்.
- குழுக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை தீர்மான நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து கலந்து கொண்ட அனைவரின் கையொப்பம் பெறுதல்.
- முதல் கூட்டத்தில் சுழற்சி முறையில் உறுப்பினர்கள் வங்கிக்கு செல்ல ஊக்குவித்தல்.

- இரண்டாவது கூட்டத்தில் ஊக்குனர் வங்கிக்கு சென்று பணம் செலுத்துதல் மற்றும் உள்கடன் பெற்று வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- சுய உதவிக் குழு பராமரிக்க வேண்டிய அனைத்து பதிவேடுகளையும் பராமரித்தல்.

- மாதாந்திர ஊக்குனர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல், அனைத்துப் பதிவேடுகளையும் சரிபார்த்து கூட்டத்தில் சமர்பித்தல், அடுத்த மாத திட்ட செயல்பாடுகளை வடிவமைத்தல்.

- ஒவ்வொரு உறுப்பினரும் கடன் தவணைத் தொகையை தவறாமல் திருப்பிச் செலுத்த உரிய அறிவுரை வழங்குதல்.

- குழுவின் வரவு செலவு கணக்குகளை உள் மற்றும் வெளித் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்தல்.

- தகுதியுள்ள உறுப்பினர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு உரிய நேரத்தில் தேவையான அனைத்து உள் கடன் மற்றும் வெளிக்கடன்களையும் பெற்று வழங்க உதவி செய்தல்.

- சகக்குழு உறுப்பினர்களிடையே நன்மதிப்பையும், ஒற்றுமையையும் பெறுதல்.

- உறுப்பினர்களுக்கிடையே சுய உதவிக்குழு சட்ட திட்டங்களை அமுல்படுத்துதல்.

- ஐ.வி.டி.பி. தொகுதியளவு கூட்டமைப்பு மற்றும் சுயஉதவிக்குழு இவற்றிற்கிடையே நல்ல பாலமாக செயல்படுதல்.

- ஐ.வி.டி.பி.–யின் நலத்திட்டச் செயல்பாடுகளை உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து அவர்களுடைய முழுமனதான ஒத்துழைப்பை பெறுதல்.

- வருடம் ஒருமுறை அனைத்து உறுப்பினர்களையும் பயிற்சியில் கலந்து கொள்ளச் செய்தல்.



## குழு பிரதிநிதிகளின் பொறுப்புகள்

- வங்கிக் கணக்கைக் பராமரிப்பதில் ஊக்குனருடன் இணைந்து செயல்படுதல்.
- சுய உதவிக் குழுக்களின் சட்டதிட்டங்களை பின்பற்றுதல்.
- சக உறுப்பினர்களுக்கு பொறுப்புகளைப் பகிர்ந்து வழங்குதல்.
- ஐ.வி.டி.பி.–யின் செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்த உறுப்பினர்களை ஒருங்கிணையச் செய்தல்.
- பயிற்சிகள் மற்றும் கூட்டங்களில் தான் கற்றுக் கொண்டதை சக உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.
- கடன் தவணைகளை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்தவும், பெற்ற கடனை நன்முறையில் பயன்படுத்தவும் ஊக்குவித்தல்.
- ஊக்குனர் இல்லாத நேரங்களில் குழுச் செயல்பாடுகளுக்கு நல்ல வழிகாட்டுதல்.

## குழு உறுப்பினர்களின் பொறுப்புகள்

- சுய உதவிக்குழுவின் வழிமுறைகளுக்கு உட்பட்டு செயல்படுதல்.
- குழுக்கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளுதல்.
- உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை சக உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.
- பொறுப்புக்களை தாமாகவே முன் வந்து ஏற்றுக்கொள்ளுதல்.
- குழுக்கூட்டம் நடைபெறும் போதே சேமிப்புத் தொகை, கடனுகுரிய தவணைத் தொகை, வட்டி, பிறகட்டணங்களை செலுத்துதல்.
- குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சுழற்சி முறையில் குழுக்கூட்டத்தில் வசூல் செய்த தொகையை வங்கிக்குச் சென்று செலுத்துதல்.
- கடன் பெற தகுதியுடைய உறுப்பினர்களைத் தேர்வு செய்தல்.
- தீர்மானங்கள் கொண்டு வர ஆலோசனை வழங்குதல் மற்றும் நிறைவேற்றுதல் அல்லது ஒப்புதல் வழங்குதல்.
- பயிற்சிகளில் தவறாமல் கலந்து கொள்ளுதல்.
- குடும்ப, சமூக மற்றும் கிராம மேம்பாட்டிற்கான அரசு நலத்திட்டங்கள் மற்றும் ஐ.வி.டி.பி. திட்டங்களில் பங்கு பெறுதல்.



# குழு சேமிப்பு

சுய உதவிக்குழுக்களின் செயல்பாடுகளில் சேமிப்பு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். உறுப்பினர்களையும் குழுவையும் வலிமையடையச் செய்வதே சேமிப்பின் தலையாய நோக்கமாகும்.

## சேமிப்பின் அவசியம்

- மகளிரிடையே தன்னம்பிக்கையை வளர்க்கிறது.
- குழுவை வெற்றிகரமாக நடத்துவதற்கு முதுகெலும்பாக சேமிப்பு விளங்குகிறது.
- உறுப்பினர்களுக்கு குடும்பத்தில் ஒரு துன்பம் வரும்போது வெளியில் சென்று அதிக வட்டிக்கு கடன் பெறுவதைத் தவிர்க்கிறது.
- சேமிப்பு, உறுப்பினர்கள் மற்றும் குழுவின் ஆற்றல் மற்றும் வலிமையை பிரதிபலிக்கிறது.
- குழு அனைத்து வகைக் கடன்களையும் பெற வழிவகை செய்கிறது.
- சேமிப்பு குழுவிற்கு உரிய அங்கீகாரத்தை வழங்குகிறது.

## சேமிப்பு வசூல் செய்வதில் உள்ள படி நிலைகள்

- ஒவ்வொரு குழுக் கூட்டத்திலும் ஒரு உறுப்பினர் ரூ. 100 முதல் ரூ. 300 வரை சேமிப்பாக செலுத்தலாம்.
- உறுப்பினர் ஒருவருக்கு சங்கக் கடன் தேவைப்படும்போது கடன் தொகையின் 10%த்தை சேமிப்பு நிதியாக முன் கூட்டியே செலுத்த வேண்டும். இந்தத் தொகை அவரவர் சேமிப்புக் கணக்கில் சேர்த்து வரவு வைக்கப்படுகிறது. இதனால் அவர்கள் சேமிப்பும் வளர்வதோடு கடன் பெறவும் தகுதி பெறுகிறார்கள்.
- ஒரு உறுப்பினர் மொத்த சேமிப்பு ரூ. 20,000 ஐ கடந்த பின் அவர்கள் கடன் பெறுவதற்கு தனியாக 10% சேமிப்பு செலுத்தத் தேவையில்லை.
- ஏற்கனவே எடுத்த கடன் 4 அல்லது 5 தவணைகள் ஒன்றாகவே செலுத்தி மீண்டும் உறுப்பினர் கடன் பெற்றால் 10% சேமிப்பு செலுத்த தேவையில்லை.
- அனைத்து உறுப்பினர்களுடைய சேமிப்பும் ஒரே மாதிரியாக இருந்தால் இலாபப் பங்கீட்டுத் தொகையைச் சமமாகப் பிரிப்பதற்கு உதவியாக இருக்கும்.

## குழு சேமிப்பு வசூல் செய்யும் முறை

- குழுக்கூட்டத்தை தலைமையேற்று நடத்த தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர், சேமிப்பு தொகையை வசூல் செய்ய வேண்டும்.
- குழுவில் வசூல் செய்த தொகையை தீர்மான புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும். உறுப்பினர் செலுத்திய சேமிப்புத் தொகையை அவரவர் தனி நபர் சேமிப்புக் புத்தகத்தில் உடனே பதிவு செய்ய வேண்டும். அதே நேரத்தில் களப்பணியாளர்கள் TAB-ல் பதிவு செய்து உறுப்பினர்களின் கைரேகையுடன் உறுதி செய்வார்.
- முழுநேர கள மேற்பார்வையாளர் வங்கி சலான் (செலுத்து சீட்டு), தீர்மான நோட்டு மற்றும் வரவு செலவு நோட்டுப்புத்தங்கள் ஆகியவற்றை சரிபார்க்க வேண்டும்.
- இவ்வாறு சரிபார்க்கப்பட்ட தீர்மான நோட்டு மற்றும் சலான் ஆகியவற்றை ஊக்குனர் அல்லது உறுப்பினர் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்திற்கு எடுத்துச் சென்று சரிபார்க்க வேண்டும்.
- மேற்கண்ட சரிபார்த்தலுக்குப் பிறகு ஊக்குனர் அல்லது உறுப்பினர் வங்கிக்குச் சென்று சேமிப்புத் தொகையை செலுத்த வேண்டும். அதன்பிறகு சலான் ரசீதை தீர்மான நோட்டில் ஒட்ட வேண்டும்.
- ஊக்குனர் அல்லது உறுப்பினர் வங்கிக் கடன் ரசீதை தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகப் பொறுப்பாளர் அல்லது அலுவலக உதவியாளரிடம் காட்ட வேண்டும். அதன் பிறகு தின நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து பணம் செலுத்தியவர் கையொப்பமிட வேண்டும்.
- தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலக பொறுப்பாளர்கள் (அல்லது) அலுவலக உதவியாளர் வங்கியில் செலுத்தப்பட்ட சேமிப்புத் தொகையை உறுதி செய்து அதன்பிறகு தொகுதியளவு கூட்டமைப்பின் கணினி மென்பொருளில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

# புதிய சுய உதவிக் குழுக்கள்

- கள மேற்பார்வையாளர்களின் மேற்பார்வையில் புதிய குழுக்கள் மாதம் இருமுறை கூட்டம் நடத்த வேண்டும்.
- முதல் மூன்று மாதங்களுக்கு உறுப்பினர்களிடம் சேமிப்புத் தொகை மட்டும் வசூல் செய்யப்பட்டு குழுக்கணக்கில் செலுத்தப்படுகிறது.
- முதல் மூன்று மாதத்தில் புதிய உறுப்பினர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு, அவர்கள் தொடர்ந்து குழுவில் உறுப்பினராக செயல்படலாமா? வேண்டாமா? என்பது தீர்மானிக்கப்படுகிறது.
- புதிய குழு ஆரம்பித்த மூன்று மாதங்கள் கழித்து குழு சேமிப்புத் தொகையிலிருந்து, உறுப்பினர்களுக்கு அவரவர் சேமிப்பில் 1:2 அடிப்படையில் சங்க கடன் வழங்கப்படுகிறது.
- புதிய குழுவை வங்கியில் இணைக்க இதன் செயல்பாடுகள் கூர்மையாக கண்காணிக்கப்படுகிறது.



# புதிய குழு துவங்கும்போது
## பெறப்பட வேண்டிய தகவல்

| | | |
|---|---|---|
| 1 | குழுவின் பெயர் | |
| 2 | வங்கிக் கணக்கு எண் | |
| 3 | கிராமம் | |
| 4 | பஞ்சாயத்து (ஊராட்சி) | |
| 5 | தாலுக்கா (வட்டம்) | |
| 6 | மாவட்டம் | |
| 7 | ஊக்குனர் பெயர் | |
| 8 | பிரதிநிதியின் பெயர் | |
| 9 | உறுப்பினர் பெயர் | |
| 10 | கணவர் / தந்தை பெயர் | |
| 11 | கல்வித் தகுதி | |
| 12 | உறுப்பினர் முகவரி | |
| 13 | ஆதார் எண் | |
| 14 | தொழில் | |
| 15 | சாதி மற்றும் மதம் (புள்ளி விவரத்திற்கு மட்டும்) | |
| 16 | தாங்கள் ஆதரவற்ற விதவையா? ஆம் / இல்லை | |
| 17 | தாங்கள் மாற்றுத்திறனாளியா? ஆம் / இல்லை | |
| 18 | தங்களுக்கு சொந்த வீடு உள்ளதா? ஆம் / இல்லை | |
| 19 | வீட்டின் தன்மை – ஓடுபோட்டது / ஓலை / கான்கீரிட் வீடு | |
| 20 | தங்கள் வீட்டில் கழிப்பறை உள்ளதா? ஆம் / இல்லை | |
| 21 | தாங்கள் சுகாதார நாப்கின் உபயோகிக்கிறீர்களா? ஆம் / இல்லை | |
| 22 | தங்கள் வீட்டில் குடிநீர் தூய்மை செய்யும் கருவி உள்ளதா? ஆம் / இல்லை | |

# புதிய சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி

**ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் ஆரம்பித்து ஏழு மாதங்களுக்குள் கீழ்க்கண்ட நான்கு பயிற்சிகளையும் முடிக்க வேண்டும்.**

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி பொருள் | எப்பொழுது நடத்த வேண்டும் |
|---|---|---|---|
| 1 | ஊக்குனர் / பிரதிநிதி பயிற்சி | 1. கூட்டம் நடத்தும் முறை<br>2. குழுக்கள் மேற்பார்வை<br>3. பிரச்சனைகளுக்கு தீர்வு<br>4. குழு வழிமுறைகள் | புதிய குழு துவங்கிய மூன்று மாதங்களுக்கு மேல் 6 மாதத்திற்குள் |
| 2 | உறுப்பினர் பயிற்சி | 1. ஐ.வி.டி.பி. குழுக்களுக்கான வழிமுறைகள்<br>2. கடன்கள் (பெறும் முறைகள்)<br>3. வட்டி விகிதம்<br>4. கடன் தவணை திருப்பிச் செலுத்தும் முறை<br>5. பொதுவான பதிவேடுகள்<br>6. குழு கூட்டத்தில் உறுப்பினர் ஒழுக்கமுறை | 6 மாதங்களுக்குள் |
| 3 | ஊக்குனர்களுக்கு / கணக்கு பதிவியல் பயிற்சி | 1. பதிவேடுகளின் முக்கியத்துவம்<br>2. பதிவு செய்யும் முறைகள்<br>3. வட்டி கணக்கிடும் முறை<br>4. நிதிவகைப் பதிவேடு பராமரித்தல்<br>5. பொதுவாக பதிவேடுகளை பராமரித்தல் | 7 மாதங்களுக்குள் |
| 4 | குழு ஒப்பந்தப் பயிற்சி | நிரந்தர குழு செயல்பாடுகளுக்காக சுய உதவி குழு விதிமுறைகளை நன்கு புரிந்து கொண்ட பின் ஒப்பந்தத்தில் கையெழுத்திடல் | வங்கிக் கடனுக்கு முன்பாக |

# பழைய சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சிகள்

**பழைய குழுக்கள்**
**வருடத்தில் ஒரு முறை அல்லது**
**வங்கிக் கடன் பெறுவதற்கு முன்பு**
**பெற வேண்டிய பயிற்சிகள்**

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பொருள் | எப்பொழுது நடத்த வேண்டும் |
|---|---|---|---|
| 1 | குழு உறுப்பினர்களுக்கு குழு மேலாண்மைப் பயிற்சி | 1. தகுதியுள்ள குழுக்கள் முன் மதிப்பீட்டுப் பயிற்சி<br>2. குழுச் செயல்பாடுகள், கடன் தவணை திருப்பிச் செலுத்துதல், காலதாமதமாக திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்.<br>3. ஒட்டு மொத்தக் குழுச் செயல்பாட்டை மதிப்பீடு செய்தல்<br>4. சுய உதவிக்குழு மற்றும் ஐ.வி.டி.பி. பற்றி அறிந்திருக்கிறார்களா? என்பதை மதிப்பீடு செய்தல்.<br>5. குழுக்களின் சுகாதாரக் குறியீடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக திட்டமிடல் (நாப்கின்/சோலார்/RO)<br>6. கடன்பெறத் தகுதியுள்ளவர்களை தேர்வு செய்தல் (மொத்தமுள்ள 20 பேரில் 10 பேர் மட்டும்)<br>7. வங்கியில் ஏதேனும் பிரச்சனை இருந்தால் அவற்றை தீர்த்தல். | வங்கிக் கடன் பெற தகுதியுள்ள உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு முன்பு |

# பயிற்சி நடத்துவதிலுள்ள படிநிலைகள்

▼

பணியாளர்கள் சுய உதவிக்குழுக்களை வகைப்படுத்துதல்

↓

பழைய குழுக்கள் / புதிய குழுக்கள்

↓

ஒவ்வொரு மாதமும் 15ம் தேதிக்கு முன்பு ஒருங்கிணைப்பாளருக்கு குழுக்கள் தகவல்களைச் சமர்ப்பித்தல்

↓

ஒருங்கிணைப்பாளர் பயிற்சிக்கான கால அட்டவணையை தயார் செய்தல்

↓

ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதிக்கு முன்பு பயிற்சியாளர்களுக்கு தகவல் அனுப்புதல்

↓

மாதாந்திர ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்தில் ஊக்குனர்களுக்கு பயிற்சி பற்றி தகவல்களைக் கூறுதல்

↓

பயிற்சி அட்டவணை தயாரிக்கப்படுகிறது

# ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழு கூட்டங்கள்

**திட்டமிட்டபடி குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒவ்வொரு குழுவும் மாதம் இரண்டு குழுக் கூட்டம் நடத்த வேண்டும்.**

## சுய உதவிக்குழு கூட்டம் எவ்வாறு நடத்தப்படுகிறது?

- குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட தேதியில் ஒவ்வொரு மாதமும் 1 முதல் 11 ம் தேதிக்குள் முதல் கூட்டமும், 15 முதல் 25 ஆம் தேதிக்குள் 2 வது குழுக் கூட்டமும் நடத்தப்படுகிறது.
- தொகுதியளவு கூட்டமைப்பு கள மேற்பார்வையாளர் இக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார்.
- கூட்டத் தொடக்கத்தில் கூட்டப் பொருள் படிக்கப்பட்டு உறுப்பினர்கள் ஒப்புதல் பெற வேண்டும்.
- குறைந்தது 90% உறுப்பினர்கள் வந்தால் மட்டும் உறுப்பினர்கள் வருகையை பதிவு செய்து குழுக்கூட்டம் நடத்தப்படுகிறது.
- அதற்கு முன்பு கடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமுல்படுத்தப்பட்டதா என்பதை கலந்தாய்வு செய்ய வேண்டும்.
- குழுக்கூட்டத்தில் கூட்டத்தை நடத்துவதற்கு இரண்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

# முதல் குழுக் கூட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

முதல் குழுக் கூட்டத்தில் சேமிப்பு மற்றும் வெளிக்கடன்கள் வசூல் செய்தல். தேவை ஏற்படின் குழு பங்களிப்பு நிதி மற்றும் பிற வசூல்கள் செய்யப்படுகிறது. ஒரு உறுப்பினர் குழுவை விட்டு வெளியேறினால், சங்கக் கடன் சிறப்புக் கடன் ஆகியவை வசூல் செய்யப்படுகிறது.

- வங்கிக் கடனை முடிக்கும் போது, வங்கியிலிருந்து கடன் முடிவு அறிக்கை பெற வேண்டும்.
- ஐ.வி.டி.பி. தலைமை அலுவலக கடன் வழங்கும் பணியாளர்களிடம் முன் கூட்டியே அனுமதி பெற்று ஐ.வி.டி.வி. கடன் நிலுவையை முடிக்க வேண்டும்.

# முதல் குழுக்கூட்டம் நடத்தும் முறை அல்லது படிநிலைகள்

▼

சேமிப்பு வசூல் செய்தல்

↓

- ஐ.வி.டி.பி. கடன் வசூல் செய்தல்
- குழு பங்களிப்பு நிதி மற்றும் பிற வசூல்கள்
- வங்கிக் கடன் வசூல் செய்தல்

↓

தீர்மானங்களையும் வசூல் செய்தவற்றையும் சரிபார்த்தல்

↓

வெளிக்கடன் தேவைப்படுபவர் பெயர் பட்டியல் தயார் செய்தல்

↓

தீர்மானங்களை படித்துக் காட்டிய பின் தீர்மான நோட்டில் உறுப்பினர்களின் கையொப்பம் பெறுதல். அந்த விபரத்தை களப்பணியாளர்கள் உடனே TAB-ல் பதிவு செய்து கைரேகையை பதிய வைத்தல்

↓

வசூல் செய்த தொகையை சுழற்சி முறையில் உறுப்பினர்கள் வங்கிக்கு எடுத்து செல்லுதல்

↓

தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் தீர்மான புத்தகத்தை காட்டி கணக்குகளை சரிபார்த்து தினப் புத்தகத்தில் பதிவு செய்தல்

↓

குழு நிதியை வங்கியில் செலுத்துதல்

↓

வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரசீது, பாஸ் புத்தகம், தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் காண்பித்து தின புத்தகத்தில் கையொப்பமிடல்

↓

கணிணியில் பதிவு செய்தல்

## முதல் குழுக்கூட்டத்திற்குப் பிறகு செய்ய வேண்டியவைகள்

- கடன் தவணை திருப்பிச் செலுத்தாதவர்கள் பெயர் பட்டியல் தயார் செய்ய வேண்டும்.
- கள மேற்பார்வையாளரும் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலக பொறுப்பாளரும், கடன் தவணை கட்டத் தவறியவர்களிடமிருந்து தவணை வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.
- வாரம் ஒரு முறை அலுவலக பொறுப்பாளர், பகுதி மேற்பார்வையாளருக்கும் சுய உதவி குழு முதன்மை ஒருங்கிணைப்பாளருக்கும் கீழ்க்கண்ட விவரங்களை சமர்பிக்க வேண்டும்.

  1. தவணைத் செலுத்த தவறியவர்கள் பட்டியல்
  2. செயல்படாத குழுக்கள் பட்டியல்
  3. முறையாக செயல்படாத குழுக்கள் பட்டியல்

- ஐ.வி.டி.பி. நிறுவனர் தலைவர் கலந்தாய்வு கூட்டத்தில் இந்த பிரச்சனைகளை எடுத்துரைத்து தீர்வுக்கு வழிவகை செய்யப்படுகிறது.

## இரண்டாவது குழுக்கூட்டத்தின் சிறப்பம்சங்கள்

- சேமிப்பு மற்றும் உள் கடன்களை மட்டும் வசூல் செய்தல்.
- உள் கடன்கள் மற்றும் பிற கடன்கள் வழங்கப்படுகிறது.
- தேவைப்படின் குழு பங்களிப்பு நிதி மற்றும் பிற கட்டணங்களை வசூலிக்க வேண்டும்.
- ஒரு உறுப்பினர் குழுவை விட்டு வெளியேறினால் அவர் பெற்ற உள் மற்றும் வெளிக்கடன்களை வசூலிப்பது குழுவின் பொறுப்பாகும்.
- கடன் தேவைப்படும் உறுப்பினர்கள் தங்கள் கடன் தேவைகளை குறிப்பிட்டு TABல் பதிவு செய்து கைரேகையிட வேண்டும்.

# இரண்டாவது குழுக்கூட்டம் நடத்தும் முறை அல்லது படிநிலைகள்

சேமிப்பு வசூல் செய்தல்

↓

சங்கக் கடன் அசல் மற்றும் வட்டி வசூலித்தல்

பிறகடன்கள் மற்றும் பிற கட்டணங்களை வசூலித்தல்

சிறப்புக் கடன் அசல் மற்றும் வட்டி வசூலித்தல்

↓

கூட்ட நடைமுறையை பதிவு செய்தல்

↓

சங்கக் கடன் நிலுவை சிறப்புக் கடன் நிலுவை ஆகியவை சரிபார்த்தல் மற்றும் கடன் பெறுபவர் பட்டியல் பெறுதல்

↓

கள மேற்பார்வையாளர் பதிவு செய்யப்பட்ட தகவல்களை ஆய்வு செய்கிறார். அவற்றை அனைவருக்கும் படித்துக்காட்டி உறுப்பினர்களுடைய கையொப்பம் பெறப்படுகிறது. அந்த விபரங்கள் அனைத்தையும் களப்பணியாளர் உடனே TAB-ல் பதிவு செய்து கைரேகையை பதிய வைத்தல்.

↓

கடன் பெறும் உறுப்பினரோடு ஊக்குனர் அலுவலகத்திற்கு வருகிறார். வசூல் செய்த தொகையை குழு வங்கி சேமிப்புக் கணக்கில் செலுத்துகிறார்.

↓

வங்கியிலிருந்து பணத்தை எடுத்து கடன் தொகையை சம்பந்தப்பட்டட உறுப்பினர்களுக்கு வழங்குதல்

↓

முதன்மை ஒருங்கிணைப்பாளர் தகுதியுடையவர்களுக்கு சிறப்புக் கடன் வழங்க ஒப்புதல் வழங்குகிறார்.

↓

குழுக் கணக்கிலிருந்து பணம் எடுத்து அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

↓

தொகுதியளவு கூட்டமைப்பு, தினப்புத்தகத்தில் பதிவு செய்து கையொப்பமிடுதல்

↓

கணிணி மென்பொருள்களில் பதிவு செய்தல்

↓

கல்வி உதவித்தொகை குழு பங்களிப்பு நிதி, வாழ்க்கை பாதுகாப்பு நிதி மற்றும் தணிக்கை கட்டணம் ஆகியவற்றை சுய உதவிக்குழு கண்காணிப்பு கணக்கிற்கு மாற்றம் செய்தல். தொகுதியளவு கூட்டமைப்பு வரவை தொகுதியளவு கூட்டமைப்பு கணக்கில் செலுத்துதல்



# இரண்டாவது குழுக்கூட்டத்தின் பிற முக்கிய அம்சங்கள்

- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, குழு ஊக்குனருக்கு ஊக்கத்தொகை, குழு கணக்கிலிருந்து வழங்கப்படும்.
- குழுவிலிருந்து விலகிய உறுப்பினர்கள் அல்லது இறந்த உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு இலாபப் பங்கீடு மற்றும் சேமிப்பு வழங்கப்படும். இவை அவர்கள் வைத்துள்ள கடன் நிலுவையை கழித்துக் கொண்டு வழங்கப்படும்.
- பொதுவாக ஐ.வி.டி.பி. கடன் மற்றும் வங்கி கடன் முதல் குழுக்கூட்டத்தில் செலுத்த வேண்டும். ஒரு வேலை குழு உறுப்பினர் விலகும் பட்சத்தில் இந்த கடன்கள் இரண்டாவது குழுக் கூட்டத்தில் செலுத்தலாம்.
- கடன் கட்ட தவறியவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, முழு நேர கள மேற்பார்வையாளரும், அலுவலக பொறுப்பாளர்களும் இணைந்து கட்டத் தவறிய கடனை வசூல் செய்ய வேண்டும்.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை கடன் கட்ட தவறியவர்கள், செயலிழந்த குழுக்களின் விவரங்களை பகுதி மேற்பார்வையாளர் அல்லது தலைமை ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- இந்த விபரங்கள் ஐ.வி.டி.பி. இயக்குனரின் ஆய்வு கூட்டத்தில் கலந்து ஆலோசிக்கப்படும்.



# ஊக்குனர்கள் ஆய்வுக் கூட்டம்

சம்மந்தப்பட்ட தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் ஒவ்வொரு மாத இறுதியிலும் 26 முதல் 28 தேதிக்குள் ஊக்குனர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெறும். ஒவ்வொரு ஊக்குனரும் தன்னுடைய இரண்டு குழுக்கூட்டத்தின் பதிவேடுகளை சரிபார்த்துக்கொள்வதுடன் குழுக்களைப் பற்றி தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்கிறார்கள்.

## ஊக்குனர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துக்கொள்ள வேண்டியவர்கள்

தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் 60 முதல் 70 ஊக்குனர்களுக்கு ஒரு கலந்தாய்வு கூட்டம் வீதம் ஒரு நாளில் 3 பிரிவுகளுக்கு இக்கூட்டம் நடைபெறும். பிரிவின் சம்மந்தப்பட்ட ஊக்குனர் மற்றும் மேற்பார்வையாளர்களும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

- அலுவலகப் பொறுப்பாளர் மேற்பார்வையில், ஊக்குனர்களே ஆய்வுக் கூட்டத்தை நடத்துவார்கள்.

## ஊக்குனர்களின் ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டியவை

- ஊக்குனர்களின் ஆய்வு கூட்டத்தில் விவாதிக்க வேண்டியவை:

  ஆய்வுக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற கீழ்க்கண்ட கமிட்டிகள் (குழுக்கள்) உருவாக்கப்பட்டுள்ளது.

  1. கணக்கு சரிபார்க்கும் குழு
  2. கூட்டம் நடத்தவேண்டிய குழு
  3. உணவு, நீர் போன்றவை ஏற்பாடு செய்யவேண்டிய குழு.

- குழுவின் மாதாந்திர வரவு, செலவு ஆய்வு செய்யப்படுகிறது. தவறுகள் ஏதேனும் இருப்பின் சரிசெய்யப்படுகிறது.
- கூட்டத்தில் உறுப்பினர் கடன் விவரம் படிக்கப்படுகிறது. குழுவின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு குழுக்கள் செயல்படுகிறதா என்றும் காலதாமதமாக கடன் திருப்பிச் செலுத்துதல் அல்லது காலம் கடந்த நிலுவைக் கடன் ஏதேனும் உள்ளதா என்றும் ஆய்வு செய்யப்படுகிறது.
- ஐ.வி.டி.பி யின் நலத்திட்டங்கள் மற்றும் பல தகவல்கள் இக்கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- குழுக்களின் செயல்திட்டங்கள் தயாரிக்கப்படுகிறது.
- குழுக்களின் பயிற்சி விவரம் தெரிவிக்கப்படுகிறது.
- இறுதியில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஊக்குனர்கள் கையொப்பம் பெறப்படுகிறது.
- ஊக்குனர்களின் வருகை கணிணியில் கைரேகை மூலம் பதிவு செய்யப்படுகிறது.



# பணியாளர்கள் ஆய்வுக் கூட்டம்

- பணியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களின் வெற்றிக்கு அடிப்படை காரணமே முறையான பணியாளர் ஆய்வுக் கூட்டங்கள் தான்.
- இந்த கூட்டங்களில் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள் ஆகியவை ஆய்வு செய்யப்படுகிறது.

## முழு நேரக் கள மேற்பார்வையாளர்கள் கூட்டம்

- தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலத்தில் அலுவலகப் பொறுப்பாளர் தலைமையில் மாதம் நான்கு முறை முழுநேர கள மேற்பார்வையாளர்களுக்கு கூட்டம் நடைபெறுகிறது.
- தேவைப்பட்டால் முதன்மை ஒருங்கிணைப்பாளர், அலுவலக பொறுப்பாளர் ஆகியோருடன் கலந்து பேசி சிறப்புக் கூட்டம் நடத்தலாம்.
- ஐ.வி.டி.பி தலைவர் அவர்களின் தலைமையில், தலைமை அலுவலகத்தில் முழுநேர கள மேற்பார்வையாளர்களுக்கு மேலும் ஒரு கூட்டம் மாத இறுதியில் நடைபெறும்.

## முழு நேர அலுவலகப் பணியாளர்கள் கூட்டம்

- ஐ.வி.டி.பி. தலைவர் அவர்கள் தலைமையில் தலைமை அலுவலத்தில் மாதம் இருமுறை முழுநேர அலுவலகப் பணியாளர்களுக்கான கூட்டம் நடைபெறும்.
- தேவை ஏற்பட்டால் முதன்மை ஒருங்கிணைப்பாளர், பகுதி ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை கலந்தாலோசித்து சிறப்புக் கூட்டம் நடத்தலாம்.





# ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உள்ள பல்வேறு வகைக் கடன் வசதிகள்

- ஐ.வி.டி.பி சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குழுவில் தங்கள் சேமிப்பு தொகை எவ்வளவு உள்ளதோ அதற்கு ஏற்றாற்போல் கடன் பெறத் தகுதி பெறுகிறார்கள்.

### உள் கடன்கள் (Internal Loan)

- சங்க கடன்
- சிறப்புக் கடன்

### வெளிக் கடன்கள் (External Loan)

- ஐ.வி.டி.பி. கடன்
- ஐ.வி.டி.பி. மொத்தக் கடன் (வங்கி மூலம்)
- வங்கிக் கடன்

# சங்க கடன்

ஐ.வி.டி.பி சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குழுவில் தங்கள் சேமிப்பு தொகை எவ்வளவு உள்ளதோ அதற்கு ஏற்றாற்போல் கடன்பெறத் தகுதி பெறுகிறார்கள்.

## வட்டி விகிதம்

- குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து வட்டி விகிதத்தை முடிவு செய்கிறார்கள்.
- குழுவின் வயது மற்றும் குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் பொதுவாக 12% முதல் 24% வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

## சங்க கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சங்க கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது |
|---|---|---|
| ரூ. 50,000 லிருந்து ரூ. 1,00,000 வரை | ரூ. 40,000 வரை | 5 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,25,000 வரை | ரூ. 50,000 வரை | 8லிருந்து 10 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல் |

## சங்க கடன் தவணைகள்

- ஒரு உறுப்பினர் ரூ.1,000 கடன் பெற்றால் 4 தவணைகளில் அதாவது அசல் மாதம் ரூ. 250 வீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- ரூ.1001 முதல் ரூ. 5,000 வரை கடன் பெறுபவர்கள் அசல் மாதம் ரூ.500 வீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- ரூ.5001 முதல் ரூ.10,000 வரை கடன் பெறுபவர் 10 மாதாந்திர தவணைகளில் அசல் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்த வேண்டும்.
- ரூ.10,000க்கு மேல் கடன் பெறுபவர் மாதம் அசல் ரூ. 1,000 வீதம் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.




## சங்கக் கடன் பெற நிபந்தனைகள்

- குறைந்தது 3 மாதங்களாவது உறுப்பினாராக இருந்திருக்க வேண்டும்.
- கடன் பெறும் தொகையில் குறைந்தது (1:2) பாதி அளவாவது குழுவில் சேமிப்பு இருக்க வேண்டும்.
- கடன் பெறும் போது கடன் தொகையில் 10% சேமிப்பாக செலுத்த வேண்டும்.
- ஒரு உறுப்பினர் சேமிப்பு ரூ. 20,000க்கு மேல் இருப்பின் சங்கக் கடன் பெறும் போது சேமிப்பு செலுத்த வேண்டியதில்லை, ஆனால் மாதாந்திரக் கூட்டத்தில் செலுத்தும் சேமிப்புத் தொகையை தொடர்ந்து செலுத்த வேண்டும்.
- ஒரு குழுவில் வைப்பு நிதி தொகை ரூ. 50,000 முதல் ரூ. 1,00.000 வரை இருந்தால் ஒரு உறுப்பினருக்கு ரூ. 40,000 வரை சங்கக் கடன் வழங்கலாம்.
- ஒரு குழுவில் வைப்பு நிதி தொகை ரூ. 1,25,000 இருந்தால் ஒரு நபருக்கு சங்கக் கடன் ரூ. 50,000 வரை தரலாம்.
- குறைபாடுள்ள குழுக்கள் அல்லது காலம் தாழ்த்தி தவணை திருப்பிச் செலுத்தும் குழுக்களுக்கு சங்கக் கடன் பெறத் தகுதி இல்லை
- ஊக்குனர் அல்லது பிரதிநிதி, ஊக்குனர் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையெனில் சங்கக் கடன் பெற அனுமதி இல்லை.
- பிற கடன்கள் பெற்ற ஒரு உறுப்பினர், குறைந்தது 3 தவணைகள் வங்கியில் திருப்பிச் செலுத்தியிருந்தால் சங்கக் கடனையும் பெறலாம்.

## சங்கக் கடன் பெறும் முறை

- குழுக்கூட்டத்தில் (சங்கக் கடன் வழங்கும் விவரம்) தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். உறுப்பினர்கள் தங்கள் கடன் தேவைகளை Tab–ல் கைரேகையை பதிவு செய்து கோர வேண்டும்.
- சங்கக் கடன் எவ்வளவு என்பதை உறுதி செய்த பிறகு கடன்பெறும் உறுப்பினர் ஊக்குனருடன் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.
- கடன் பெறும் உறுப்பினர் உரிய காரணத்தைக் கூறி கடன் வழங்கல் பதிவேட்டில் கையொப்பமிட்டு, தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் கணிணியில் கைரேகையை பதிவு செய்து கடன் தொகையை பெற்றுக் கொள்ளலாம்.

## சங்கக் கடன் திருப்பிச் செலுத்தும் முறை

- சங்கக் கடன் மாதாந்திரத் தவணையை அசல் மற்றும் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டும்.
- குழுக்கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களின் முன்னிலையில் தான் சங்கக்கடன் தவணையை திருப்பிச் செலுத்த வேண்டும்.
- வேறு எங்கும் தனியாக ஊக்குனரிடம் இத்தவணைத் தொகையை திருப்பிச் செலுத்தக் கூடாது.
- கடன்பெறும் உறுப்பினரின் தனிநபர் பாஸ் புத்தகம், கடன் பேரேடு, தீர்மான புத்தகம் ஆகியவற்றில் திருப்பிச் செலுத்தும் தவணையை பதிவு செய்யவேண்டும்.
- அவசரத் தேவைக் காரணமாக புதியகடன் பெறும் போது 4 அல்லது 5 தவணைகளை ஒரே நேரத்தில் திருப்பிச் செலுத்தி குழு தீர்மானத்துடன் புதியக் கடனை பெறலாம்.





# சங்க சிறப்புக் கடன்

ஒரு குழு உறுப்பினர் ஏற்கனவே சங்கக் கடன் பெற்று திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கும் போதும் அவசரச் சூழ்நிலை ஏற்படும் போதும் மேலும் ஒரு கடன் பெறலாம். இதுவே சங்கச் சிறப்புக் கடன் ஆகும்.

### சங்க சிறப்புக் கடனுக்கு வட்டி விகிதம்

- குழுவின் வயதிற்கேற்பவும், குழுவின் முடிவைப் பொறுத்தும் 12% முதல் 24% வரை வட்டி விதிக்கப்படும்.

### சிறப்புக்கடன் பெறத் தகுதி

- குழு துவங்கி குறைந்தது 2 வருடங்கள் முடிந்திருக்க வேண்டும்.
- சங்கக் கடன் பெற்ற உறுப்பினர் மொத்த சங்கக் கடன் நிலுவைத் தொகை ரூ.3000க்கு (3 தவணை) மேல் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவர் அடுத்த சங்கக் கடன் கோரலாம்.

## சிறப்புக்கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சிறப்புக் கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| ரூ. 25,000 | ரூ. 25,000 | 2 வருடத்திற்கு மேல் 5 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 50,000 லிருந்து ரூ. 1,00,000 வரை | ரூ. 30,000 | 5 வருடத்திற்கு மேல் 10 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 1,25,000 வரை | ரூ. 30,000 | 10 வருடத்திற்குமேல் | ரூ. 70,000 வரை |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 40,000 | 10 வருடத்திற்குமேல் | ரூ. 80,000 வரை |

- குழுவின் வைப்பு நிதி ரூ. 25,000 இருந்தால், ஒரு உறுப்பினர் ரூ. 25,000 சிறப்பு கடன் பெறலாம்.
- குழுவின் வைப்பு நிதி ரூ. 50,000 முதல் ரூ. 1,25,000 வரை இருந்தால் ஒரு உறுப்பினருக்கு ரூ. 30,000 வரை சிறப்பு கடன் வழங்கலாம்.
- குழுவின் வைப்பு நிதி ரூ. 1,50,000 வரை இருந்தால் ஒரு உறுப்பினருக்கு ரூ. 40,000 வரை சிறப்பு கடன் வழங்கலாம்.
- ஒரு உறுப்பினர் வங்கிக் கடன் பெற்றிருப்பின் குறைந்தது 10 தவணைகள் திருப்பிச் செலுத்தியிருந்தால்தான் சங்க சிறப்புக்கடன் பெறத் தகுதி பெறுகிறார்.
- தற்போது பெறும் சங்க சிறப்புக் கடன் மற்றும் இதரக் கடன்கள் மொத்த நிலுவை ரூ.60,000க்கு மேல் இருக்கக்கூடாது. குழுவின் டெபாசிட் தொகை ரூ.1,25,000 இருந்தால் மேற்கண்ட கடன்களின் மொத்த நிலுவைத்தொகை ரூ.70,000 வரை இருக்கலாம்.
- குழுவின் டெபாசிட் தொகை ரூ.1,50,000 இருந்தால் மேற்கண்ட கடன்களின் மொத்த நிலுவைத் தொகை ரூ.80,000 வரை இருக்கலாம்.

## சிறப்புக்கடன் தவணைகள்

- ரூ.10,000க்கு மேல் ரூ.40,000 வரை கடன் பெற்றவர் மாதம் ரூ.1000 வீதம் அதிகபட்சம் 40 மாதத் தவணைகளுக்குள் வட்டியுடன் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும்.

## சங்க சிறப்புக் கடன் வழங்கும் முறை

- கள மேற்பார்வையாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்கள் முன்னிலையில் சங்க சிறப்புக்கடன் வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும்.
- சங்கக் கடன் தேவைப்படுவோர் TAB மூலம் கைரேகை வைத்து தங்கள் கடன் தேவையை தெரிவிக்க வேண்டும்.
- சங்க சிறப்புக்கடன் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
- முழுநேரப் பணியாளர் விண்ணப்பத்தை சரிபார்த்து கையொப்பமிட வேண்டும்.
- சிறப்புக்கடன் கோரும் உறுப்பினர், ஊக்குனர் இருவரும் விண்ணப்பத்தை சரிபார்ப்பதற்காக, அலுவலகத்தில் உள்ள முழு நேரப் பணியாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- பிறகு விண்ணப்பங்கள் சரிபார்த்தலுக்கு முதன்மை ஒருங்கிணைப்பாளருக்கும் பகுதி ஒருங்கிணைப்பாளருக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. அதன் பிறகு குழு ஊக்குனர் விண்ணப்பங்களை வங்கியில் சமர்ப்பித்து கடன் தொகையை வங்கியிலிருந்து எடுத்து தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர் முன்னிலையில் உறுப்பினருக்கு வழங்க வேண்டும்.

## சங்க சிறப்புக் கடன் திருப்பிச் செலுத்தும் முறை

- அசல் மற்றும் வட்டியுடன் தவணைத்தொகையை எந்த வித குறைபாடில்லாமல் திருப்பிச் செலுத்தவேண்டும்.
- குழுக்கூட்டத்தில் மட்டும் தவணையைச் செலுத்த வேண்டும்.
- தவணைத்தொகையை ஊக்குனரிடம் தனியாக வழங்கக் கூடாது.
- தீர்மான புத்தகம், தனி நபர் பாஸ் புத்தகம், கடன் பேரேடு ஆகியவற்றில் திருப்பி செலுத்திய தவணை விவரங்களை பதிவு செய்யவேண்டும்.
- கடன் தொகை தவணை முழுவதையும் ஒரேநேரத்தில் திருப்பிச் செலுத்தக் கூடாது. ஆனால் புதிய சிறப்புக் கடன் பெறும் போது 4 அல்லது 5 தவணைகளை குழு தீர்மானத்துடன் ஒரே நேரத்தில் திருப்பிச் செலுத்தலாம்.

# ஐ.வி.டி.பி. கடன்


- ஐ.வி.டி.பி. தலைவர் ஐ.வி.டி.பி. உள்நிதி கணக்கிலிருந்து குழுக்களுக்கு வழங்கும் கடன் ஐ.வி.டி.பி கடன் ஆகும்.
- வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்க நேரடியாக கம்பெனி மூலம் டிவி, ஃபிரிட்ஜ், டி.வி.எஸ். இருசக்கர வாகனங்கள், தங்க நாணயங்கள், சோலார் மின்விசிறி, கணினி, குடிநீர் சுத்திகரிப்பான், சுகாதார நாப்கின்கள் ஆகியவை வெளிச்சந்தை விலையிலிருந்து அதிகபட்ச தள்ளுபடி பெறப்பட்டு கடன் வழங்கப்படுகிறது.
- பொதுவாக இந்த கடன் மாதத்தின் இரு குழுக் கூட்டங்களிலும் வழங்கப்படுகிறது. ஆனால் கடன் திருப்பிச் செலுத்துதல் முதல் கூட்டத்தில் மட்டும் அனுமதிக்கப்படுகிறது. குழுவிலிருந்து நிரந்தரமாக விலகும் ஒரு உறுப்பினர் மொத்த கடன் நிலுவைத் தொகையையும் 2வது கூட்டத்தில் செலுத்தலாம்.
- வட்டி விகிதம் – இக்கடனுக்கு 12% வட்டி வசூலிக்கப்படுகிறது. மேலும் பெறும் கடன் தொகைக்கு குழு பங்களிப்பு நிதி செலுத்த வேண்டும்.

## ஐ.வி.டி.பி கடன் வழங்க நிபந்தனைகள்

- குழு வைப்பு நிதி உருவாக்கியிருக்க வேண்டும்.
- குழு துவங்கி குறைந்தது 3 ஆண்டுகளாகியிருக்க வேண்டும்
- குழு 4 வகை பயிற்சியிலும் கலந்து கொண்டிருக்க வேண்டும்
- ஒரே நேரத்தில் அதிகபட்சம் 5 உறுப்பினர்கள் இக்கடனை பெறலாம்.
- ஒரு உறுப்பினர் அதிகபட்சம் ரூ.50,000 வரை இக்கடன் பெறலாம்
- இக்கடன் பெறுபவர் ஏற்கனவே பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்துவதில் எவ்வித குறைபாடும் இருக்கக்கூடாது.
- ஒரு உறுப்பினருக்கு ஒரு கடன் மட்டும் தான் இருக்க வேண்டும்.
- ஒரு கடனை கட்டி முடித்த பின் அடுத்த கடனை பெறலாம்.

## ஐ.வி.டி.பி கடன் தவணைகள்

| தொகை | அதிகபட்ச காலம் | ஒரு தவணைத் தொகை |
|---|---|---|
| ரூ. 1,000 – ரூ. 5000 | 12 மாதங்கள் | ரூ. 500 |
| ரூ. 5,001 – ரூ. 20,000 | 24 மாதங்கள் | ரூ. 1,000 |
| ரூ. 20,000 அதற்குமேல் | 24 மாதங்கள் | கடன் தொகைக்கேற்ப மாறும் |



## ஐ.வி.டி.பி கடன் வழங்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

- முதல் அல்லது 2 வது குழுக்கூட்டத்தில்  தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
- தொகுதியளவு கூட்டமைப்புக் கூட்டத்தில் இத்தீர்மானத்தை வைக்கவேண்டும்.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர் இதை சரிபார்க்கவேண்டும்
- தலைமை அலுவலகப் பணியாளர் கடன் விண்ணப்பங்களை முதன்மை ஒருங்கிணைப்பாளரிடம்  ஒப்படைக்க வேண்டும்.
- தலைமை அலுவலகப் பணியாளர்கள் கடன் விண்ணப்பங்களைப் பெற்று ஏற்கனவே  பெற்றக் கடன்களில் குறைபாடு உள்ளதா என்பதை சரிபார்த்து ஐ.வி.டி.பி.  தலைவருக்கு சமர்ப்பிக்கிறார்கள்.
- தலைவர் கடன் அனுமதி வழங்கி, தொகையை குழுக்கணக்கில் செலுத்துகிறார்.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் மற்றும் தலைமை அலுவலகப் பணியாளர்கள் கடன் பதிவேடுகளை பராமரிக்கிறார்கள்.




# வங்கிக் கடன்

- ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்கள் வங்கிகளுடன் இணைக்கப்படுகிறது. வங்கிகள் பரிந்துரை செய்யும் குழுக்கள் மதிப்பீடு செய்யப்படுகிறது. பிறகு குழுக்களுக்கு தேவையான கடன்களை வங்கிகள் அனுமதிக்கின்றன.

## வட்டி விகிதம்

- வங்கிகள் விதிக்கும் அதே வட்டியை மட்டும் குழுக்கள் செலுத்தும்.
- வங்கி விதிக்கும் வட்டிக்கு மேல் கூடுதலாக எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

ஒரு உறுப்பினருக்கு வழங்கும்
**குறைந்தபட்ச கடன் தொகை**
**ரூ. 10,000**

**அதிகபட்ச**
கடன் தொகை
**ரூ. 1,20,000**

| தவணை முறைகள் | |
|---|---|
| ரூ. 10,000 | மாத தவணை ரூ. 500 |
| ரூ. 15,000 | மாத தவணை ரூ. 750 |
| ரூ. 20,000 | மாத தவணை ரூ. 1000 |
| ரூ. 25,000 | மாத தவணை ரூ. 1250 |
| ரூ. 30,000 | மாத தவணை ரூ. 1500 |
| ரூ. 35,000 | மாத தவணை ரூ. 1750 |
| ரூ. 40,000 | மாத தவணை ரூ. 2000 |
| ரூ. 45,000 | மாத தவணை ரூ. 2250 |
| ரூ. 50,000 | மாத தவணை ரூ. 2500 |
| ரூ. 60,000 | மாத தவணை ரூ. 3000 |
| ரூ. 75,000 | மாத தவணை ரூ. 3750 |
| ரூ.1,00,000 | மாத தவணை ரூ. 5000 |
| ரூ. 120,000 | மாத தவணை ரூ. 6000 |

## வங்கிக் கடன் பெறும் முறைகள்

**வங்கிக்கடன் குழுக்கள் பெயரில்தான் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் பெயரில் அல்ல.**

- குழு துவங்கி குறைந்தது 12 மாதங்கள் ஆகியிருக்கவேண்டும். ஐ.வி.டி.பி நிறுவன விதிகளின்படி குழு நடத்தப்பட்டிருக்க வேண்டும். கடன் பெறும் குழு ஐ.வி.டி.பி–யின் 4 வகை பயிற்சிகளையும் பெற்றிருக்க வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவு செய்த பிறகு தான் அந்த குழுவிற்கு வங்கிக்கடன் அனுமதிக்கப்படுகிறது.
- வங்கிக் கடன் தேவைப்படும் பழைய குழுக்களுக்கு குழுக்கள் ஒருங்கிணைப்பு பயிற்சி மற்றும் மேலாண்மைப் பயிற்சி ஆகியவை கட்டாயமாக்கப்பட்டு வழங்கப்படுகிறது
- முதல் இரண்டு குழுக் கூட்டங்களில் உரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வங்கிக் கடன் பெறும் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். தகுதியுடைய பயனாளிகள் பட்டியல் ஊக்குனருக்கும், களமேற்பார்வையாளருக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
- ஊக்குனர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் களமேற்பார்வையாளர் இந்த பட்டியலை சமர்ப்பிக்கிறார். தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலக பொறுப்பாளர் இதை சரிபார்க்கிறார்.
- அலுவலகப் பொறுப்பாளர் சரிபார்த்த பின் தொகுதியளவு கூட்டமைப்பு கடன் அனுமதி வழங்கலாமா என்பதை முடிவு செய்கிறது.
- இந்த தீர்மானம் சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- வங்கி மேலாளர் அனுமதி வழங்கிய பிறகு இந்த பட்டியல் முதன்மை ஒருங்கிணைப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- முதன்மை ஒருங்கிணைப்பாளர் சரிபார்த்த பின் ஐ.வி.டி.பி. தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- ஐ.வி.டி.பி. தலைவர் அனுமதி வழங்கிய பிறகு முதன்மை ஒருங்கிணைப்பாளர் மூலம் பகுதி ஒருங்கிணைப்பாளர் அலுவலகப் பொறுப்பாளருக்கு அனுப்பப்படுகிறது.
- மதிப்பீட்டுக் கூட்டம் சம்மந்தப்பட்ட கிராமத்தில் நடத்தப்படுகிறது. வங்கி மேலாளர், ஐ.வி.டி.பியின் அப்பகுதி மேற்பார்வையாளர், முழுநேர கள மேற்பார்வையாளர் மற்றும் தொகுதியளவு கூட்டமைப்பின் அலுவலகப் பொறுப்பாளர் ஆகியோர் மதிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.
- அலுவலகப் பொறுப்பாளர், பகுதி மேற்பார்வையாளர் குழுவால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளை ஆய்வு செய்து தீர்மான நோட்டுப்புத்தகத்தில் கையொப்பமிடுகிறார்கள்.
- மதிப்பீடு செய்யப்பட்ட குழுக்களின் ஊக்குனர்கள் தலைமை அலுவலகத்தில் நடைபெறும் பயிற்சியில் கலந்துகொள்கிறார்கள். இங்கு குழுக்களின் பிரச்சனைகள் கலந்தாய்வு செய்து தீர்வுகாணப்படுகிறது. இங்கு அனைத்து பதிவேடுகளும் சரிபார்க்கப்படுகிறது.
- ஐ.வி.டி.பி. தலைவர் தீர்மானத்தில் கையொப்பமிட்ட பிறகு வங்கிக் கடனுக்காக விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்படுகிறது.
- ஒரு குறிப்பிட்ட தேதியில் வங்கிக்கடன் குழுவின் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டு, உடனே அது குழுவின் சேமிப்புக் கணக்கிற்கு குழு தீர்மானத்துடன் மாற்றப்படுகிறது.
- குழு ஊக்குனரும், பிரதிநிதியும் சேமிப்புக்கணக்கில் உள்ள கடன் தொகையை எடுத்து உடனே கடன் கோரிய உறுப்பினர்களுக்கு கடன் வழங்கல் பதிவேட்டில் கையொப்பம் பெற்று வழங்குகிறார்கள். மேலும் கடன் பெற்ற உறுப்பினர்கள் கணிணியில் தங்களது கைரேகையை பதிவு செய்து செல்வார்கள்.
- அடுத்த கூட்டத்தில் குழு பங்களிப்பு நிதி வசூலிக்கப்படுகிறது.
- கடன் பெற்ற அடுத்த மாதம் முதல் உறுப்பினர்கள் கடன் தவணையை திருப்பிச் செலுத்துகிறார்கள்.

## வங்கிக் கடன் பெறுவதற்குரிய நிபந்தனைகள்

- முதல் வங்கிக் கடன் பெற்ற ஒவ்வொரு குழுவும் அடுத்த வங்கிக் கடன் விண்ணப்பிப்பதற்கு முன்பு பயிற்சி பெற வேண்டும். குழுக்களின் பிரச்சனைகளை கலந்தாய்வு செய்து தீர்வு காணப்படுகிறது. குழுக்களை மேலும் வலிமையாக்க செயல்திட்டம் தயாரிக்கப்படுகிறது.
- பதிவேடுகள் கூர்ந்தாய்வு செய்யப்படுகிறது. வங்கிக்கடன் பெற பயனாளிகள் தேர்வுசெய்யப்படுகிறது. இது தீர்மானமாக நிறைவேற்றப்படுகிறது. மேலும் குழு உறுப்பினர்களுக்கு உடல்நலம் மற்றும் சுகாதார பயிற்சியும் வழங்கப்படுகிறது.
- பழைய குழுக்களின் கடன் விண்ணப்பங்கள் ஆய்வு செய்தல்
- பழைய குழுக்கள் வங்கிக் கடனுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் குழு மேலாண்மைப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
- வங்கிக் கடன் குழுவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரே முறையில் வழங்கப்படாது. வங்கிக்கடன் இரண்டு பிரிவாக வழங்கப்படும்.
- முதல் பிரிவு (BATCH) பயனாளிகள் குறைந்தபட்சம் 10 தவணைகளாவது செலுத்தியிருக்க வேண்டும்.
- இக்குழுக்கள் தொடர்ந்து சேமிப்பு செய்திருக்க வேண்டும்.
- அனைத்து உறுப்பினர்களும் (90%) மாதம் இரண்டு குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்மான நோட்டில் கையொப்பமிட்டிருக்க வேண்டும் .
- அனைத்து பதிவேடுகளும் எழுதி முடித்திருக்க வேண்டும் .
- ஐ.வி.டி.பி. கடன், சங்கக் கடன், சங்க சிறப்புக் கடன், வங்கிக் கடன், அனைத்தும் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.
- சேமிப்பு கணக்கு வங்கி இருப்பு ரூ15,000 க்கு மேல் இருந்தால் வங்கிக் கடன் பெற முடியாது.
- 2வது 3வது வங்கிக்கடன், தனி நபர் சேமிப்பிற்கு நான்கு மடங்கு வழங்கப்படுகிறது.
- குழுவிற்கு முதல் கடன் வழங்கும்போது குழுவின் மொத்த சேமிப்பைப்போல் (1:4) நான்கு மடங்கு கடன் கிடைக்கும்.

## அதிகபட்ச வங்கிக்கடன் வழங்க நிபந்தனைகள்

- புதிய குழுவாக இருந்தால் குழு ஆரம்பித்து ஓராண்டு ஆகியிருக்க வேண்டும்.
- கடன் கோரும் குழு 4 வகை பயிற்சிகளிலும் கலந்து கொண்டிருக்க வேண்டும்.
- குழுச் சேமிப்பிலிருந்து சங்க கடன் சுழற்சி முறையில் அனைவருக்கும் முறையாக வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரு குழுவின் பெயரில் வங்கியில் ரூ. 25,000 வைப்பு தொகை இருந்தால் ஒரு உறுப்பினர் சேமிப்பின் அடிப்படையில் 1:4 விகிதாச்சாரத்தில் ரூ. 40,000 வங்கி கடன் பெறாலம். (1:4 என்பது உதாரணமாக ஒரு உறுப்பினரின் சேமிப்பு ரூ. 10,000 இருந்தால், ரூ. 40,000 வரை வங்கி கடன் பெறலாம்) ஒரு உறுப்பினருடைய மொத்தக் கடன் (சங்கக் கடன் சிறப்புக் கடன், ஐ.வி.டி.பி கடன் மற்றும் வங்கிக் கடன் நிலுவை ரூ.60,000 வரை இருக்கலாம்.)
- வங்கியில் ஒரு குழுவின் வைப்புநிதி ரூ. 50,000 இருந்தால் குழு உறுப்பினர் ரூ. 50,000 வரை வங்கிக் கடன் பெறலாம். ஒரு உறுப்பினரின் சேமிப்பு ரூ. 20,000 க்கு மேல் இருந்தாலும் அதிகபட்சம் குழுவிற்கு வயதிற்கேற்ப முடிவு செய்யப்பட்ட வங்கிக் கடன் பெறமுடியும். இங்கு 1:4 விகிதாச்சாரம் பின்பற்ற முடியாது. ஒரு

உறுப்பினர் அனைத்து வகைக் கடனும் சேர்ந்த நிலுவை ரூ.80,000 வரை இருக்கலாம்.

- வங்கியில் ஒரு குழுவின் வைப்புநிதி ரூ.1,25,000 இருந்தால் ஒரு உறுப்பினரின் மொத்தக் கடன் நிலுவை ரூ. 90,000 வரையிலும் குழு வைப்புநிதி ரூ. 1,50,000 இருந்தால் ஒரு உறுப்பினரின் மொத்தக் கடன் நிலுவை ரூ. 1,00,000 வரையிலும் இருக்கலாம்.
- சங்க சிறப்புக் கடனில் நிலுவை இருந்தால் வங்கிக் கடன் குறைவாக வழங்கப்படும்.
- ஐ.வி.டி.பி. கடனில் நிலுவை இருந்தாலும், வங்கிக் கடன் குறைவாக வழங்கப்படும்.
- குழு உறுப்பினர் பிற கடன்கள் திருப்பிச் செலுத்துவதில் தாமதம் இருக்கக்கூடாது.
- குழுவோ அல்லது உறுப்பினரோ காலம் தாழ்த்தி கடன் திருப்பி செலுத்தி இருக்கக்கூடாது.
- குழுவின் அனைத்து பதிவேடுகளும் முழுமையாக அன்றைய தேதிவரை எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## வங்கிக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் வயது | சேமிப்பு | குழுவின் நிலை வைப்பு | வங்கிக் கடன் தொகை | உறுப்பினர்களின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|---|
| 1 வருட குழுக்கள் | ₹ 200 | - | ₹ 10,000 முதல் ₹ 30,000 | |
| 1-3 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 25,000 | ₹ 40,000 | ₹ 60,000 |
| 3 - 4 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 50,000 | ₹ 50,000 | ₹ 80,000 |
| 4 - 5 வருட குழுக்கள் | ₹ 200 | ₹ 75,000 | ₹ 60,000 | ₹ 90,000 |
| 5 ஆண்டுகளுக்கு மேல் 7 வருடங்கள் வரை | ₹ 250 | ₹ 75,000 - ₹ 1,00,000 | ₹ 75,000 | ₹ 1,00,000 |
| 7 ஆண்டுகளுக்கு மேல் 10 வருடங்கள் வரை | ₹ 300 | ₹ 1,00,000 ₹ 1,25,000 | ₹ 1,00,000 | ₹ 1,20,000 |
| 10 ஆண்டுகளுக்கு மேல் இயங்கும் குழுக்கள் | ₹ 300 | ₹ 1,50,000 | ₹ 1,20,000 | ₹ 1,50,000 |



# வங்கிக் கடன் மதிப்பீடு செய்தல்

ஐ.வி.டி.பி தலைமைக் குழுவும் (MONITORING COMMITTEE) சம்மந்தப்பட்ட வங்கி மேலாளரும் குழுவின் செயல்பாடுகள், பதிவேடுகள் ஆகியவற்றை ஆய்வு செய்து அந்த குழு வங்கிக் கடன் பெற தகுதியுடையதா என்று தீர்மானிப்பதுதான் வங்கிக் கடன் மதிப்பீடு செய்தல் ஆகும்

## மதிப்பீடு செய்வதின் நோக்கம்

- குழுவின் செயல்பாடுகளை ஆய்வுசெய்தல்.
- உறுப்பினர்களின் ஈடுபாட்டைக் கண்டறிதல்.
- சங்க உள்கடன் பரிமாற்றத்தை அறிந்து கொள்ளுதல்.
- குழு சட்டதிட்டங்களுக்குட்பட்டு செயல்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தல்.
- கடன் கோரும் உறுப்பினர் சங்க உறுப்பினருக்கான பயிற்சியில் கலந்து கொண்டாரா? என்பதை அறிதல்.
- ஒரு உறுப்பினர் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த தவறினால் குழுவில் உள்ள மொத்த உறுப்பினர்களும் சேர்ந்து தான் அக்கடன் நிலுவை தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதை அனைவருக்கும் புரியவைத்தல்.

## இரண்டு வகையான மதிப்பீடு செய்தல்

1. புதிய குழுக்கள் முதல் முறையாக வங்கிக் கடன் கோரும்போது மதிப்பீடு செய்தல்.
2. பழைய குழுக்கள் வங்கிக் கடன் கோரும்போது மதிப்பீடு செய்தல்.

## வங்கிக் கடன் பெறுதவதற்கு முன்பு ஊக்குனர்களுக்கான

# வங்கிக் கடன் மேலாண்மை பயிற்சி

- குழு மேலாண்மைப் பயிற்சி மற்றும் மதிப்பீடு முடிந்தவுடன் ஊக்குனர் அனைத்துப் பதிவேடுகளுடன் ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்திற்கு வர வேண்டும்.
- இந்த பயிற்சியில் அனைத்து பதிவேடுகளும் சரிபார்க்கப்பட்டு குழு உறுப்பினர்களிடையே ஏதாவது பிரச்சனை இருக்கிறதா என்று ஆய்வு செய்து தீர்வு காணப்படுகிறது.
- ஐ.வி.டி.பி. தலைவர் முன்னிலையில், கடன்பெறும் பயனாளிகளின் விவரங்களை ஆய்வு செய்து கடன்பெறுபவர் எந்த அளவிற்கு கவனமாகவும், பொறுப்புணர்வுடனும் பெற்ற கடனை நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும் என்பதையும் அதேபோல் கடனை முறையாக திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்படுகிறது.
- இறுதியில் ஐ.வி.டி.பி தலைவர் கடன் அனுமதி வழங்குகிறார்.

# சுய உதவிக் குழுக்களுக்கான பதிவேடுகள்

- குழுக்கள் செயல்பாடுகளை அறிந்துகொள்ள பதிவேடுகள் தான் அடிப்படையாக இருக்கிறது.
- பதிவேடுகள் பராமரிப்பதால் குழு உறுப்பினர்களுக்கு குழுவின் மீது நம்பிக்கை வளர்கிறது. வெளியிலிருந்து குழுச் செயல்பாடுகளை பார்ப்பவர்களுக்கும் பதிவேடுகள் நம்பிக்கையூட்டுகிறது.
- குழுக்களின் தரத்தைக் கண்டறிய உதவுகிறது.
- பல்வேறு வகைக் கடன்கள் வழங்க வழிவகைசெய்கிறது.
- பதிவேடுகள் தணிக்கைக்கு பெரிதும் உதவிசெய்கிறது.
- குழுவின் எதிர்கால செயல்பாடுகளை நிர்ணயிக்க பதிவேடுகள் பயன்படுகின்றன.

# சுய உதவிக்குழுக்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள்

1. தீர்மானப் புத்தகம்
2. வருகைப் பதிவேடு
3. சேமிப்பு பதிவேடு
4. சங்கக்கடன் சிறப்புக்கடன் பதிவேடு
5. ஐ.வி.டி.பி கடன்வங்கிக்கடன் பதிவேடு
6. குழு உறுப்பினர்கடன் வழங்கல் பதிவேடு
7. உறுப்பினர் சேமிப்புகணக்குபுத்தகம்
8. ரொக்கப் பதிவேடு (Cash Book)
9. பொதுப் பேரேடு (General Ledger)
10. வங்கி கணக்கு புத்தகம்
11. வங்கிக்கடன் கணக்குப் புத்தகம்.



# தீர்மானப் புத்தகம்

- குழுவின் இதயம் போன்றது
- தீர்மான நோட்டை அடிப்படையாகக் கொண்டு குழுவின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.
- குழு உறுப்பினர் நன்னடத்தை விதிகள் மற்றும் விதிமுறைகளை உள்ளடக்கியதுதான் தீர்மான புத்தகம். குழுச் செயல்பாடுகளில் உறுப்பினர்கள் பங்கேற்பு எவ்வாறு உள்ளது என்பதைக் காட்டுகிறது.
- குழுவின் வரவுசெலவு கணக்குகளுக்கு உறுப்பினர்கள் அனுமதி வழங்குவதைக் காட்டுகிறது.
- மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குழுக்கணக்கு உள்தணிக்கை செய்யப்படுகிறதா என்பதைக் காட்டுகிறது.
- குழு உறுப்பினர்கள் செயல்பாடுகள் பற்றிக் கூறுகிறது.
- குழுவின் வரவு செலவை பதிவு செய்யும் முக்கியமான ஆவணம் ஆகும்.

**தீர்மான நோட்டில் எவ்வாறு பதிவு செய்வது?**

கீழ்க்கண்ட விவரங்கள் தீர்மான நோட்டில் பதியப்படுகிறது.

- (1) குழுக் கூட்டத்தேதி (2) கூட்டத்தின் வரிசை எண் (3) குழுவின் பெயர் (4) இறைவணக்கம் (5) உறுதிமொழி (6) தலைமை ஏற்பவர் (7) இதுவரைசேமிப்பு (8) அன்றைய சேமிப்பு (9) அன்றைய தேதிவரை மொத்த சேமிப்பு (10) வருகைப் பதிவு
- இதற்கு முன்பு நடந்த கூட்டத்தின் சேமிப்பு மற்றும் கூட்டம் நடைபெறும் அன்றைய சேமிப்பு ஆகியவை பதியப்படுகிறது.
- நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கூட்டப் பொருளாக எழுதப்படவேண்டும்.
- உறுப்பினர்களின் சேமிப்பு, கடன் வழங்கிய விவரம், அந்த கூட்டத்தில் வசூலான தொகை ஆகியவை உரிய இடங்களில் பதியப்படுகிறது.
- புதியதாக கடன் கோரி விண்ணப்பிப்பவருக்கான தீர்மானம், அவர் சேமிப்பு, கடன் நிலுவை ஆகியவை உரிய இடங்களில் பதியப்படுகிறது.
- கூட்டத்தில் அதிக அளவில் கூட தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் ஆனால் அழித்தல் திருத்தல் இருக்கக் கூடாது.
- தீர்மானங்கள் உறுப்பினர்களுக்கு படித்துக் காட்டப்பட்டு அவர்கள் கையொப்பம் பெறப்பட வேண்டும்.
- கூட்டத்திற்கு வராதவர்களுக்காக வேறு எவரும் மாற்றி கையொப்பமிடக் கூடாது.
- வெற்றுக் காகிதத்தில் கையொப்பம் பெறக்கூடாது.
- கூட்டத்தில் வசூலிக்கப்படும் தொகை முழுவதற்கும் (Denomination) விவரத்துடன் பதிய வேண்டும்.
- குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் வெளியேறும் போதும் ஒரு புதிய உறுப்பினர் சேரும் போதும் அதைப் பதிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
- வங்கிப் பரிமாற்றங்கள் உரிய இடத்தில் பதிய வேண்டும்.
- வங்கிக்கு அனுப்பும் உறுப்பினர்கள் பெயர், தொகை ஆகியவற்றை தீர்மானமாகப் பதிய வேண்டும்.
- முழு நேர கள மேற்பார்வையாளர் அனைத்து விவரங்களும் விடுபடாமல் பதியப்பட்டுள்ளதா என்று பார்த்து, பார்த்ததற்கு சான்றாக கையொப்பமிட வேண்டும்.
- கடன் பெறும் பயனாளி அலுவலகத்திற்கு வந்து அலுவலகப் பணியாளர் முன்பாக கடன் வழங்கல் பதிவேட்டில் கையொப்பம் இட்டு கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- தவிர்க்க முடியாத காரணங்களால் ஒரு உறுப்பினர் வரவில்லையெனில் அவருடைய நெருங்கிய உறவினர் வரலாம். அதற்கான தீர்மானம் மற்றும் புகைப்படத்துடன் தீர்மான புத்தகத்தில் எழுதியிருக்க வேண்டும்.
- தொகை வங்கியில் செலுத்திய அன்றே வங்கிச் சலான் ரசீது தீர்மான நோட்டில் ஒட்டப்பட வேண்டும்.

## இணைப்பு - 1

# முதல் கூட்ட தீர்மான நோட்டின் மாதிரிப் படிவம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தலைமை ஏற்பவர் | | கூட்டத்தின் வ.எண் | | இன்றைய தேதி வரை சேமிப்பு | |
| முன்னிலை வகிப்பவர் | | கூட்ட தேதி | | இன்று சேமிப்பு | |
| இறைவணக்கம் | | கூட்ட நாள் | | மொத்த சேமிப்பு | |
| விழிப்புணர்வு பாடல் | | மொத்தம் | | | |
| உறுதி மொழி | | வருகை | | | |
| முழு நேர மேற்பார்வையாளர் | | விழுக்காடு (%) | | | |

| | |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |

| வ. எண். | உறுப்பினர்கள் விபரம் | சேமிப்பு விபரம் | | | முதல் தொகுதி வங்கிக் கடன் | | | | 2-வது தொகுதி வங்கிக் கடன் | | | | குழு பங்களிப்பு நிதி | பிற வசூல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர்கள் பெயர் & கணவர் பெயர் | இதுவரை சேமிப்பு | இன்றைய சேமிப்பு | மொத்த சேமிப்பு | கடன் தொகை | இன்றைய தேதி வரை திருப்பி செலுத்தியது | இன்றைய வசூல் | மீதம் | கடன் தொகை | இன்றைய தேதி வரை திருப்பி செலுத்தியது | இன்றைய வசூல் | மீதம் | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

## ஐ.வி.டி.பி. கடன் வசூல் - முதல் கூட்ட தீர்மான நோட்டின் படிவம்

| வ.எண். | உறுப்பினர் பெயர் & கணவர் பெயர் | கடன் தொகை | கடன் பெற காரணம் | கடன் வழங்கிய தேதி | வட்டி விகிதம் | கடன் தொகை | இன்றைய தேதி வரை திருப்பி செலுத்தியது | இன்றைய தேதி வசூல் | மீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

## நாப்கின், தங்க நாணயம், குடிநீர் சுத்திகரிப்பான், சோலார் மின்விசிறி கடன் - முதல் கூட்ட தீர்மான நோட்டின் படிவம்

| வ.எண். | உறுப்பினர் பெயர் & கணவர் பெயர் | கடன் தொகை | கடன் வழங்கிய தேதி | கடன் தொகை | இன்றைய தேதி வரை திருப்பி செலுத்தியது | இன்றைய தேதி வசூல் | மீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

## நாப்கின், தங்க நாணயம், குடிநீர் சுத்திகரிப்பான், சோலார் மின்விசிறி கடன் - முதல் கூட்ட தீர்மான நோட்டின் படிவம்

| வங்கியில் செலுத்திய விவரம் | | | | வங்கியிலிருந்து பெறப்பட்ட விவரம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண். | உறுப்பினர் பெயர் & கணவர் பெயர் | கடன் தொகை | கடன் வழங்கிய தேதி | கடன் தொகை | இன்றைய தேதி வரை திருப்பி செலுத்தியது | இன்றைய தேதி வசூல் | மீதம் |
| | | | | | | | |
| | | | | | | | |

| DENOMINATION BOX | | | |
|---|---|---|---|
| 2000 | x | | |
| 500 | x | | |
| 200 | x | | |
| 100 | x | | |
| 50 | x | | |
| 20 | x | | |
| 10 | x | | |
| 5 | x | | |
| Coins | x | | |
| TOTAL | | | |

| உறுப்பினர்கள் கையொப்பம் | |
|---|---|
| 1. | 11 |
| 2. | 12 |
| 3. | 13 |
| 4 | 14 |
| 5 | 15 |
| 6 | 16 |
| 7 | 17 |
| 8 | 18 |
| 9 | 19 |
| 10 | 20 |

| முழு நேர கள மேற்பார்வையாளர்கள் & தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் கையொப்பம் | | |
|---|---|---|
| 1. | 2. | 3. |

## தீர்மான புத்தகத்தின் பயன்கள்

- உறுப்பினர்களுடைய சேமிப்பு, கடன் நிலுவை, மற்றும் முக்கியத் தீர்மானங்கள் ஆகிய தகவல்களை வழங்குகிறது.
- ரொக்கப் பதிவேடு எழுத மிகவும் பயன்படுகிறது.
- பிரச்சனைகளை தவிர்க்க உதவுகிறது.
- குழுவில் பிரச்சனை வரும்போது, தீர்மான நோட்டு அதிகார பூர்வமான அத்தாட்சியாகவும், இறுதியான முடிவாகவும் அமைகிறது.

## வருகைப் பதிவேட்டின் முக்கியத்துவம்

- உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திற்கு வருகை தருவதை தெரிந்து கொள்ள உதவுகிறது.
- குழுக் கூட்டத்திற்கு வராத உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கிறது.

## வருகைப்பதிவு செய்யும் முறை

- வருகை புரிந்தார் என்பதற்கு 'X' குறியீடு
- திருமணம், மருத்துவ சிகிச்சை, ஈமச்சடங்கு போன்றவற்றிற்கு 'L' (LEAVE) குறியீடு
- எந்த விதத் தகவலுமின்றி கூட்டத்திக்கு வரவில்லையென்றால் – 'A' (ABSENT) குறியீடு
- பிரசவத்திற்கு செல்பவர்களுக்கு 6 கூட்டங்களுக்கு மட்டும் – 'ML' (MATERNITY LEAVE) குறியீடு
- சேமிப்பு அல்லது கடன் தவணை செலுத்த தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உறுப்பினர் தன் நெருங்கிய உறவினர் வரும்போது, உறுப்பினர் பெயருக்கு எதிரில் 'L' (LEAVE) குறியிட வேண்டும்.
- உறுப்பினர் இறப்பு என்றால் – 'D' (DEATH) குறியீடு
- இவற்றை கூட்டத் தொடக்கத்திலேயே பதிவு செய்ய வேண்டும்.
- ஊக்குனர் கூட்ட இறுதியில் கையொப்பமிட வேண்டும்.
- எல்லாவற்றையும் சரிபார்த்த பிறகு இறுதியில் களப் பணியாளர் கையொப்பமிட வேண்டும்.

## சேமிப்பு பதிவேடு - (சேமிப்பு பதிவேட்டின் முக்கியத்துவம்)

- தேதி வாரியாக, கூட்ட வாரியாக ஒரு உறுப்பினரின் சேமிப்புத்தொகை எவ்வளவு என்பதைக் காட்டுகிறது.
- சேமிப்பு எந்த மாதம் அதிகரித்துள்ளது என்பதையும் காட்டுகிறது.

| தேதி | இன்றைய சேமிப்பு | மொத்த சேமிப்பு | ஊக்குனர் கையொப்பம் |
|---|---|---|---|
| 01.04.2021 | 100 | 100 | |
| 16.04.2021 | 50 | 150 | |
| 01.05.2021 | 100 | 250 | |
| 16.05.2021 | 75 | 325 | |
| 01.06.2021 | 100 | 425 | |
| 16.06.2021 | 50 | 475 | |
| 01.07.2021 | 100 | 575 | |
| | CB | 575 | |

## பதிவு செய்யும் முறை

- முதல் பக்கத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் பதிவு செய்யப்படுகிறது.
  1. உறுப்பினர் பெயர்
  2. கணவர் பெயர்
  3. உறுப்பினர் எண்
- உறுப்பினரின் அன்றைய சேமிப்பு, கூட்ட வாரியான சேமிப்பு, மொத்த சேமிப்பு ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.
- கூட்டத்தின் முடிவில் ஊக்குனர் அனைத்துப் பதிவுகளையும் சரிபார்த்து கையொப்பமிடுகிறார்.
- சேமிப்பு கூட்டுத்தொகை பதியும்போது தவறு ஏற்பட்டால் அதன்மீது வட்டமிட்டு CB (Corrected Balance) என்று எழுத வேண்டும்.

# சங்க கடன் பதிவேடு மற்றும் சிறப்புக் கடன் பதிவேடு

| | | | |
|---|---|---|---|
| கடன் தொகை | | உறுப்பினர் எண் | |
| காரணம் | | உறுப்பினர் பெயர் | |
| தவணை மாதங்கள் | | கணவர் பெயர் | |
| வட்டி விகிதம் | | | |
| கடன் வழங்கிய தேதி | | | |

| வ.எண். | விவரம் | கடன் தொகை | இதுவரை கட்டியது | திருப்பிபச் செலுத்திய விபரம் | | கடன் தொகை | ஊக்குனர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அசல் | வட்டி | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

## பதிவேடு எழுதும் முறை (சங்க கடன் மற்றும் சிறப்பு சங்கக் கடன்)

- முதல் பக்கத்தில் கடன் பெறுபவர் பெயர், கணவர் பெயர், கடன் வழங்கிய தேதி, கடன் தொகை, கடன் பெறக் காரணம் போன்ற விபரங்களை எழுத வேணடும்.
- அசல், வட்டி எவ்வளவு என்று தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும். சரிபார்த்த பிறகு நிலுவை எவ்வளவு உள்ளது என்பதை சம்மந்தப்பட்ட உறுப்பினருக்கு தெரிவிக்க வேண்டும்.
- மாத மாதம் ஊக்குனர் ஆய்வு கூட்டத்தில் கடன் நிலுவை எழுதப்பட்டுள்ளதா என சரிபார்க்க வேண்டும்.

# ஐ.வி.டி.பி. மற்றும் வங்கிக் கடன் பதிவேடு

**ஐ.வி.டி.பி./வங்கி கடன் பதிவேட்டின் முக்கியத்துவம்**

- ஒவ்வொரு உறுப்பினரும் பெற்ற கடன் தொகை எவ்வளவு? அவர் திருப்பிச் செலுத்தும் தவணை எவ்வளவு? என்பதைக் காட்டுகிறது.
- கடன் எந்த காரணத்திற்காக பெறுகிறார்கள்? என்பதையும் குழுவில் ஒரு சிலர் மட்டும் கடன் பெறுகிறார்களா? அல்லது அனைவருமே கடன் பெறுகிறார்களா? என்பதையும் காட்டுகிறது.
- அசல் மற்றும் வட்டி முறையாக கணக்கிட்டு செலுத்தப்படுகிறதா? என்பதை தெரிந்துகொள்ள உதவுகிறது.

| வ.எண் | தேதி | கடன் தொகை | ரசீது எண் | அடுத்தத்த இருதவைண திருப்பிச் செலுத்தியதற்கு இடையே உள்ள நாட்கள் | திருப்பிச் செலுத்திய தொகை | வட்டி | அசல் | நிலுவை | ஊக்குனர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **20.10.2020** | | | | | | | **10,000** | |
| | **01.11.2020** | | | **13** | **500** | **41** | **459** | **9,541** | |
| | **01.12.2020** | | | **30** | **500** | **41** | **409** | **9,132** | |
| | **02.01.2020** | | | **32** | **500** | **41** | **408** | **8,724** | |

## வாய்ப்பாடு கணக்கிடுவது எவ்வாறு?

**HOW TO CALCULATE INTEREST**

நிலுவைத் தொகை x $\frac{\text{எத்தனை நாட்களுக்கு வட்டி கட்டப்பட வேண்டும்}}{365}$ x $\frac{\text{வட்டி விகிதம்}}{365}$ x வட்டித் தொகை

உதாரணமாக 11.5% வட்டி விகிதம் என்றால்

(a) $10000 \times \frac{13}{365} \quad \frac{11.5}{100}$ = Rs. 41

(b) $9541 \times \frac{30}{365} \quad \frac{11.5}{100}$ = Rs. 91

(c) $9132 \times \frac{32}{365} \quad \frac{11.5}{100}$ = Rs. 92

## வட்டி கணக்கிடும்போது கவனிக்க வேண்டியவை

- ஒரு கூட்டத்தின் துவக்கத்தில் ஒவ்வொருவருடைய கடன் நிலுவை எவ்வளவு என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- கடந்த தவணை செலுத்தியதற்கும் இன்றைய தவணை செலுத்தும் தேதிக்கும் இடையில் உள்ள நாட்களை வட்டி கணக்கிட எடுத்துக்கொள்ள வேண்டும்.

# கடன் வழங்கல் பதிவேடு

## கடன் வழங்கல் பதிவேட்டின் முக்கியத்துவம்

- ஒரு குழுவின் அனைத்து வகை கடன் விவரங்களையும் காட்டும் அடிப்படைப் பதிவேடு கடன் வழங்கல் பதிவேடு ஆகும்
  1) சங்க கடன் 2) சிறப்புக் கடன் 3) வங்கிக் கடன்
  4) ஊக்கத் தொகை 5) இலாபப் பங்கீட்டுத் தொகை
- ஒரு உறுப்பினர் குழுவை விட்டு வெளியேறும்போது அவருடைய கையொப்பம் பெறப்பட வேண்டும்.
- உறுப்பினர்களுக்கிடையே நீதி மன்றம் செல்லும் அளவிற்கு பிரச்சனை ஏதேனும் வருமானால் இதை அதிகாரப் பூர்வமான அத்தாட்சியாக சமர்பிக்கலாம்.

| வ.எண். | உறுப்பினர் பெயர் | கணவர் / பாதுகாவலர் பெயர் | கடன் தொகை | கடன் பெற காரணம் | கைரேகை | உறுப்பினர் கையொப்பம் | கள பணியாளர் கையொப்பம் | அலுவலக பணியாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

## கடன் வழங்கல் பதிவேட்டில் விவரங்கள் பதிவு செய்வது எவ்வாறு?

- கீழ்க்கண்ட விவரங்கள் பதிவேட்டில் பதியப்படுகிறது.
  1) கடன் பெறும் உறுப்பினர் பெயர்
  2) கணவர் பெயர்
  3) கடன் தொகை
- ரூ. 5000 க்கு மேல் கடன் பெறும் உறுப்பினரிடம் ஸ்டாம்ப் மீது கையொப்பம் பெற வேண்டும்.
- ஒரு உறுப்பினர் குழுவை விட்டு விலகும்போது கடைசியாக செலுத்திய தொகை மற்றும் தேதி குறிப்பிட்டு அவருடைய கையொப்பம் பெற வேண்டும்.
- கீழ்க்கண்ட தொகைகள் பெறும் போது உறுப்பினர் கையொப்பம் பெறப்பட வேண்டும்.
  1) சங்கக் கடன் 2) சங்க இதர முன்பணம் 3) சிறப்புக் கடன்
  4) வங்கிக் கடன் 5) ஐ.வி.டி.பி. கடன் 6) லாபப் பங்கீடு
  7) ஊக்கத் தொகை
- குழுவை விட்டு விலகும் போது பெறும் சேமிப்பு
- கூட்டத்தின் முடிவில் முழுநேர கள மேற்பார்வையாளர் கடன் விவரங்களை சரிபார்க்க வேண்டும்.
- கடன் வழங்கல் பதிவேட்டில் விவரங்களை பதிவு செய்து கையொப்பம் இட்ட பிறகுதான் கடன் தொகை, உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
- கடன் வழங்கல் பதிவேட்டை வைத்துத்தான் தணிக்கை நடைபெறும்.

# தனி நபர் சேமிப்பு புத்தகம்

## உறுப்பினர் பாஸ் புத்தகத்தின் முக்கியத்துவம்

- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் உறுப்பினர் சேமிப்பு புத்தகம் ஒரு நம்பத்தகுந்த சான்று ஆகும்.
- சேமிப்பு மற்றும் அனைத்து கடன் தொகை திருப்பி செலுத்திய தவணை தொகை, நிலுவைத் தவணை தொகை ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம்.
- இது உறுப்பினர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் நம்பிக்கை ஊட்டுகிறது.

## உறுப்பினர் சேமிப்பு புத்தகம் முதல் பகுதி (சேமிப்பு விவரம்)

| கூட்ட தேதி | இன்றைய கூட்டத்தில் வழங்கப்பட்ட சேமிப்பு | இது வரை உள்ள மொத்த சேமிப்பு | ஊக்குனர் கையொப்பம் |
|---|---|---|---|
| 01.04.2021 | 100 | 100 | |
| 16.04.2021 | 50 | 150 | |
| 01.05.2021 | 100 | 250 | |
| 16.05.2021 | 75 | 325 | |
| 01.06.2021 | 100 | 425 | |
| 16.06.2021 | 50 | 475 | |
| 01.07.2021 | 100 | 575 | |

## உறுப்பினர் சேமிப்பு புத்தகம் இரண்டாம் பகுதி (கடன் விவரம்)

| தேதி | விவரம் | கடன் தொகை | திருப்பிச் செலுத்தியது | | கடன் நிலுவை | ஊக்குனர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் | வட்டி | | |
| | | | | | | |
| | | | | | | |

## உறுப்பினர் சேமிப்பு புத்தகத்தில் செய்ய வேண்டிய பதிவுகள்

- உறுப்பினர் சேமிப்பு புத்தகம் சம்மந்தப்பட்ட உறுப்பினரிடம்தான் இருக்க வேண்டும்.
- இந்த சேமிப்பு புத்தகத்தில் உள்ள பதிவுகள், தீர்மான புத்தகம், சேமிப்பு கடன், கடன் பேரேட்டை ஒத்திருக்க வேண்டும்.
- முதல் பகுதியில் சேமிப்பு விவரமும், 2 வது பகுதியில் கடன் விவரமும் அடங்கி இருக்கும்.
- உறுப்பினர் குழுக்கூட்டத்திற்கு வரும்போது தவறாமல் சேமிப்புப் புத்தகம் கொண்டு வரவேண்டும்.
- உறுப்பினர் போட்டோ ஒட்டப்பட்டு முழு நேர மேற்பார்வையாளரால் ஐ.வி.டி.பி. முத்திரையுடன் கையொப்பம் இடப்படவேண்டும்.
- சேமிப்பு மற்றும் கடன் சம்மந்தமான பதிவுகளை சரிபார்த்தப்பின் ஊக்குனர் சேமிப்பு புத்தகத்தில் கையொப்பமிட வேண்டும்.
- உறுப்பினர் கடனுக்காக விண்ணப்பிக்கும்போது இந்த சேமிப்பு புத்தகம் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.
- குழுவில் பதிவேடுகளை பராமரிப்பவர்தான் சேமிப்பு புத்தகத்திலும் பதிவுகள் செய்ய வேண்டும்.

# சுய உதவிக்குழுக்கள் ஆவணங்கள் ஆய்வு செய்தல்

- சுய உதவிக்குழுக்களின் ஆவணங்கள் காலமுறைப்படி ஆய்வு செய்யப்படுகிறது. (குழுக்கூட்டத்தில் மாதம் ஒருமுறை, 3 மாதத்திற்கு ஒரு முறை, ஆண்டிற்கு ஒருமுறை)

| குழுக்கூட்டத்தில் | மாதம் ஒருமுறை | மூன்று மாதங்களுக்கு ஒரு முறை | ஆண்டிற்கு ஒரு முறை |
|---|---|---|---|
| • முழு நேர களப்பணியாளர்கள் குழுக்கூட்டம் நடைபெறும்போது குழுவின் ஆவணங்களை ஆய்வு செய்கிறார்கள்.<br>• அலுவலகப் பணியாளர்கள் வங்கிக்குச் செல்வதற்கு முன்பு குழுவின் ஆவணங்களை சரிபார்க்கிறார்கள். சரிபார்த்த பிறகு தான் ஆவணங்களை வங்கிக்கு அனுப்புகிறார்கள். | • தொகுதியளவு கூட்டமைப்பு அளவில் ஊக்குனர்கள் ஆய்வு கூட்டம் நடைபெறுகிறது.<br>• மாதம் ஒரு முறை நடைபெறும் குழு கூட்டத்தில் ஆவணங்கள் சரிபார்க்கப்படுகிறது. | • ஆவணங்கள் முழு நேர கள மேற்பார்வையாளர்–களுக்கிடையே மாற்றம் செய்யப்பட்டு உள் தணிக்கை செய்யப்படுகிறது. | • ஐ.வி.டி.பி. தலைவர் தணிக்கை குழுக்கள் அமைக்கிறார்.<br>• இந்த குழுக்கள் ஆண்டு தணிக்கை நடத்தி சுய உதவிக்குழுக்களுக்கு தரம் வழங்குகிறது. |

அனைத்து ஐ.வி.டி.பி. குழுக்களும் தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்களால் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு செய்யப்படுகிறது.

முழு நேர கள மேற்பார்வையாளர் குழுக்கூட்டங்களில் கலந்து கொண்டு கூட்ட நடைமுறைகள், உறுப்பினர் வருகை, தொகை செலுத்துதல் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு தீர்மான நோட்டில் கையொப்பமிடுகிறார்.

கள மேற்பார்வையாளர்களின் பணிகளை அலுவலகப் பணியாளர்கள் மேற்பார்வையிடுகிறார்கள்.

பகுதி மேற்பார்வையாளர்கள் களப்பணியாளர்களின் பணிகளை மேற்பார்வை செய்கிறார்கள்.

ஐ.வி.டி.பி. தலைமை அலுவலக கண்காணிப்புக் குழு பகுதி (Area) மேற்பார்வையாளர்களின் பணிகளை மேற்பார்வை செய்கிறார்கள்.

# கணக்கு மற்றும் தணிக்கை

- கணக்கு மற்றும் தணிக்கை சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாக தொடர்ந்து செயல்படுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் சுய உதவிக் குழுக்களின் கணக்குகள் தணிக்கை செய்யப்படுகிறது.
- ஒவ்வொரு நிதி ஆண்டு இறுதிக்குள் குழுவின் பணிகளை முடிப்பதற்கும், நேர்செய்வதற்கும், கணக்குகளை முடிப்பதற்கும் இது மிகவும் உதவுகிறது.
- பதிவுசெய்யப்பட்ட பட்டயக்கணக்கர் (Chartered Accountant) சுய உதவிக்குழு கணக்குகளை சரிபார்த்து கணக்கு தணிக்கை அறிக்கை வழங்குகிறார். இது வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**கணக்கு**

- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் ஒரு கணக்காளர் உதவியுடன் சுய உதவிக்குழு கணக்குகளை ஐ.வி.டி.பி கணினி மென்பொருள்மூலம் பராமரிக்கிறார்கள்.
- ஒவ்வொரு சுய உதவிக்குழு உறுப்பினருக்கும் ஒரு ஐ.வி.டி.பி தனிநபர் சேமிப்பு புத்தகம் வழங்கப்பட்டு அனைத்துவகை பணப்பரிமாற்றமும் அதில் பதியப்படுகிறது.
- சுய உதவிக் குழுக்கள் திறம்பட செயல்படுவதற்கும், நிதி மற்றும் கணக்கை கையாளுவதற்கும் சில நிபந்தனைகளை பின்பற்றவேண்டும்.

| விபரம் | காலம் | எங்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது |
|---|---|---|
| ஆண்டு சந்தா | ஏப்ரல் | தொகுதியளவு கூட்டமைப்பு கணக்கிற்கு |
| வாழ்க்கை பாதுகாப்பு நிதி | ஜனவரி | சுய உதவிக்குழு கண்காணிப்பு நிதி கணக்கிற்கு |
| தணிக்கை கட்டணம் | மார்ச் | ஐ.வி.டி.பி. கண்காணிப்பு நிதி கணக்கிற்கு |
| குழு பங்களிப்பு நிதி | உறுப்பினர் வெளிக்கடன் பெறும்போது மட்டும் | தொகுதியளவு கூட்டமைப்பு கணக்கு மற்றும் ஐ.வி.டி.பி. கண்காணிப்பு கணக்கிற்கு |

# உறுப்பினர்கள் குழுவிற்கு செலுத்த வேண்டிய தொகை

- கூட்டத்திற்கு அன்றைய நாள் தலைமை ஏற்கும் உறுப்பினர் சேமிப்பு மற்றும் அனைத்து கடன் தவணைகளையும் வசூல் செய்ய வேண்டும்.
- வசூலிக்கப்பட்ட விவரங்களை உறுப்பினர் சேமிப்பு புத்தகம், கடன் பதிவேடு மற்றும் தீர்மானப் புத்தகம் ஆகியவற்றில் ஊக்குனர் பதிவு செய்ய வேண்டும்.
- ஊக்குனர் வங்கிச் சலானை பூர்த்தி செய்கிறார். முழுநேர களமேற்பார்வையாளர் அதை சரிபார்க்கிறார். தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர் தீர்மான நோட்டையும் சலானையும் சரிபார்க்கிறார். தொகை குழுக் கணக்கில் செலுத்தப்படுகிறது. உறுப்பினர்கள் செலுத்திய வங்கிக்கடன் தவணைத்தொகை குழுவின் வங்கிக்கடன் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. உறுப்பினர்கள் செலுத்திய ஐ.வி.டி.பி கடன் தவணைத்தொகை ஐ.வி.டி.பி கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

- தொகுதியளவு கூட்டமைப்புக் கணக்கு மற்றும் சுய உதவிக் குழு கண்காணிப்பு கணக்கு ஆகிய வங்கிக் கணக்குகளுக்கு சம்மந்தப்பட்ட தொகை மாற்றம் செய்யப்படுகிறது.
- வங்கியில் பணம் செலுத்தியதற்கான சலான் ரசீதை தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் பார்த்தபிறகு, தொகுதியளவு கூட்டமைப்பின் தினப்புத்தகத்தில் (Day Book) பதிவு செய்யப்படுகிறது. உறுப்பினர் கையொப்பம் (அ) ஊக்குனர் கையொப்பம் பெறப்படுகிறது. சலான் ரசீது தீர்மான நோட்டில் ஒட்டப்படுகிறது.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள், தொகை வங்கியில் செலுத்தியதை உறுதிசெய்து அந்த விவரத்தை ஐ.வி.டி.பி கணினி மென்பொருளில் பதிவு செய்கிறார்கள்
- தவணை ஒழுங்காக செலுத்தாத குறைபாடு உள்ளவர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டு அப்பகுதி மேற்பார்வையாளர் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு தக்க நடவடிக்கைக்காக சமர்பிக்கப்படுகிறது.
- 15 நாட்களுக்கு ஒருமுறை குறைபாடு உள்ளவர் பட்டியல் ஐ.வி.டி.பி தலைவர் முன்னிலையில் சரிபார்க்கப்பட்டு பிரச்சனைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## ஒவ்வொரு சுய உதவிக்குழுவும் குறைந்தபட்சம் பராமரிக்க வேண்டிய வங்கி சேமிப்பு கணக்கு குறைந்தபட்ச இருப்புத் தொகை

- குழு ஆரம்பித்து 2 முதல் 5 ஆண்டுகள் ஆன குழுக்கள் குறைந்த பட்சம் ரூ. 3,000 இருப்புத் தொகை வைத்திருக்க வேண்டும்.
- துவங்கி ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆன குழுக்கள் குறைந்த பட்சம் ரூ. 5,000 இருப்புத் தொகை வைத்திருக்க வேண்டும். இது புதிய குழுக்களுக்கு பொருந்தாது.

## உறுப்பினர்கள் குழுவை விட்டு விலகும்போது முழு நேர கள மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்

- குழுவில் பிரச்சனைக்குரிய உறுப்பினர் விபரத்தை ஊக்குனர், முழுநேர களப்பணியாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
- கள மேற்பார்வையாளர்கள் மற்றுமுள்ள பணியாளர்கள் சேர்ந்து பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சரியான தீர்வு கிடைக்கவில்லையென்றால் பிரச்சனையை அப்பகுதி மேற்பார்வையாளர் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கவனத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.
- ஒரு உறுப்பினர் நிதிவகை முறைகேடு ஏதேனும் செய்திருந்தால் அவரை குழுவைவிட்டு வெளியேற்ற மற்ற குழு உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து குழுத்தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
- அவர் தவணை நிலுவை ஏதேனும் குழுவிற்கு கட்ட வேண்டியதிருந்தால் அந்த மொத்த தொகையையும் செலுத்திவிட வேண்டும். அவர் செலுத்த வேண்டிய நிலுவை தவணைத்தொகையை அவருடைய சேமிப்பு மற்றும் இலாப பங்கீடு தொகையை வைத்து சரி செய்து கொள்ளலாம்.
- அந்த உறுப்பினர் இறுதியாக, குழுவை விட்டு வெளியேறும்போதும் கடன் வழங்கல் பதிவேட்டில் விபரம் எழுதி அவருடைய கையொப்பம் பெற வேண்டும். அதன்பிறகு பொறுப்பாளர் / உதவியாளர் மேற்கூறிய பதிவுகளை சரிபார்த்தமைக்காக கையொப்பமிட வேண்டும்.

# தணிக்கை

## அ) குழுத் தணிக்கை

- ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்கான, சுய உதவிக்குழுக்களின் வரவு செலவு மற்றும் பிற பணபரிமாற்ற கணக்குகளை, தகுதிவாய்ந்த ஐ.வி.டி.பி பணியாளர் குழு தணிக்கை செய்கிறது இதை குழுத்தணிக்கை என்கிறோம்.

## ஆ) தணிக்கையின் முக்கியத்துவம் :

- குழுவில் பணப் பரிமாற்றத்தில் நிதிவகை முறைகேடு ஏதேனும் நடந்திருப்பின் சுட்டிக் காட்டப்பட்டு அதை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஆவணங்களில் தவறான பதிவுகள், தவறான வரவு செலவுக் கணக்குகள் இருப்பின் தணிக்கை செய்யப்பட்டு, தவறுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கை உடனுக்குடன் எடுக்கப்படுகிறது.
- வரவு செலவு கணக்கு, தணிக்கை அறிக்கையின் உதவியால், குழுக்கள் பல்வேறு வகை கடன்கள் பெற தகுதிபெறுகிறது.
- குழுக்கள் தங்கள் நிதிநிலைமையை நிலைப்படுத்திக்கொள்ள தணிக்கை அறிக்கை உதவியாக உள்ளது.

## இ) தணிக்கை வகைகள்

- இரண்டு வகை தணிக்கைகள் நடைபெறுகின்றன் அவை

  (1) உள்தணிக்கை

  (2) வெளித்தணிக்கை

## 1. உள் தணிக்கை

- ஒரு தொகுதியளவு கூட்டமைப்பைச் சேர்ந்த குழுக்களின் வரவு செலவு கணக்குகளை வேறு ஒரு தொகுதியளவு கூட்டமைப்பில் உள்ள முழு நேர கள மேற்பார்வையாளர்கள் குழுவால் தணிக்கை செய்யப்படுகிறது. இந்த முறைக்கு உள்தணிக்கை எனறு பெயர்.

### உள் தணிக்கையின் சிறப்பு அம்சங்கள் :

- உள் தணிக்கை 3 மாதங்களுக்கு ஒரு முறை மிக கவனமாக செய்யப்படுகிறது. கட்டணம் எதும் வசூலிக்கப்படுவதில்லை
- அனைத்து ஆவணங்களும் முழுமையாக பராமரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- வங்கி இருப்பு அறிக்கை பெற்றிருக்க வேண்டும்.
- வங்கிக்கடன் தீர்ந்ததற்கான சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
- உள்தணிக்கை முடிந்த பிறகு தணிக்கை அறிக்கை பெறப்பட்டு முதன்மை ஒருங்கிணைப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
- ஐ.வி.டி.பி தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் தணிக்கை அறிக்கை கலந்தாய்வு நடைபெறுகிறது. வரவு செலவு தணிக்கை அறிக்கைகள் படித்துக் காட்டப்படுகின்றன.
- மறுப்பு ஏதும் இருப்பின் அவற்றை சரிசெய்ய உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# தணிக்கை

2. **வெளித் தணிக்கை**

- ஒவ்வொரு ஆண்டும் ஐ.வி.டி.பி தலைவர் அவர்களுடைய மேற்பார்வையில் ஒரு அனுபவம் வாய்ந்த பணியாளர் குழு உருவாக்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களின் ஆவணங்களை இந்த தணிக்கை குழு சரிபார்த்து தரம் வழங்குகிறது.
- பட்டயக்கணக்கர் (Chartered Accountant) தணிக்கை அறிக்கை வழங்குகிறார். இது சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**வெளித் தணிக்கையின் சிறப்பு அம்சங்கள் :**

- ஒரு நிதி ஆண்டின் வரவு செலவு கணக்குகள் ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை தணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- தணிக்கையின் போது அனைத்து ஆவணங்களும் முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தணிக்கைக் கட்டணத்தை சம்மந்தப்பட்ட சுய உதவிக் குழுக்களே ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- வங்கிக் கணக்கு அறிக்கை பெறப்பட்டிருக்க வேண்டும்.
- வங்கிக் கடன் தீர்ந்து முடிவுற்ற சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும்.
- குழுக்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வெண்கலம், வெள்ளி, தங்கம், வைரம் என தரங்கள் வழங்கப்படுகிறது.
- மேற்கண்ட தர நிலைகளை உள்ளடக்கி தணிக்கை அறிக்கை தயாரிக்கப்படுகிறது.
- ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுவின் கண்காணிப்புக்குழு தணிக்கை அறிக்கையை கலந்தாய்வு செய்து முதன்மை ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பி வைக்கும்.
- ஐ.வி.டி.பி. தலைவர் அவர்களுடைய தலைமையில் நடக்கும் கூட்டத்தில் தணிக்கை அறிக்கை குறைகள் நிறைகளுடன் படிக்கப்பட்டு தணிக்கைத் தடைகள் உடனே நிவர்த்தி செய்யப்படுகிறது.
- இறுதியில் அங்கீகாரம் வழங்கும் தணிக்கை அலுவலர் கீழ்கண்ட அறிக்கைகளை தயார்செய்து சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு சமர்ப்பிக்கிறார்.

1. வங்கியில் பெறப்பட்ட வரவு அறிக்கை
2. வரவு செலவு கணக்கு
3. வரவு செலவு நிலுவை அறிக்கை

# ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு
# தணிக்கை தர மதிப்பீட்டு படிவம் 2020-2021

குழுவின் பெயர் ................................................ குழுவின் வயது .......................... கிளையின் பெயர் ..........................................

| வ. எண் | காரணிகள் | மொத்த மதிப்பெண் | பெற்ற மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | தீர்மானங்கள் தெளிவாக மற்றும் முறையாக இருத்தல் | 10 | |
| 2 | கடன் தவணை தவறாமல், நிலுவையில்லாமல் இருத்தல்<br>(சங்க கடன், சிறப்புக் கடன், வங்கிக் கடன், ஐ.வி.டி.பி. கடன்) | 20 | |
| 3 | வங்கியில் பணம் செலுத்துவது (தொடர்ந்து தாமதமாக, பிரித்து செலுத்துதல், குறைவாக செலுத்துதல்) போன்றவை இல்லாமல் இருத்தல், சுழற்சி முறையில் வங்கிக்கு வருதல் | 10 | |
| 4 | கையிருப்பு இல்லாமல் இருத்தல் | 5 | |
| 5 | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழு கூட்டங்களிலாவது 100% (20/20) வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல் மற்றும் திருப்பி செலுத்துதல் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல். | 5 | |
| 6 | உள் தணிக்கை மற்றும் வெளித் தணிக்கை முறையாக செய்து இருத்தல்<br>(அனைத்து பதிவேடுகளும் முடித்து இருத்தல்) (A/C Ledger, Member Pass Book) | 5 | |
| 7 | குழுவின் எல்லா செயல்பாடுகளிலும் வருகை 95%க்கு குறைவில்லாமல் இருத்தல்<br>(குழு கூட்டம், பயிற்சி, வங்கி கடன் பயனாளிகள் தேர்வு, Tab-ல் கைரேகை பதிவு செய்து கையொப்பம் இருத்தல்) (Signature) | 5 | |
| 8 | ஐ,வி.டி.பி. நிறுவனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள் பற்றி தெரிந்து குழுவின் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு குழுவை நடத்தியிருத்தல் | 5 | |
| 9 | ஊக்குனர் அல்லது குழுவே அனைத்து பதிவேடுகளையும் பராமரித்தல்<br>(அடித்தல், திருத்தல் இல்லமல் பராமரித்தல்) | 5 | |
| 10 | வங்கி நிலைப்பு (டெபாசிட்) செய்து இருத்தல்<br>2 – 3 வருட குழுக்கள் – ரூ. 25,000<br>3 – 5 வருட குழுக்கள் – ரூ. 50,000<br>5 – 7 வருட குழுக்கள் – ரூ. 75,000, ரூ. 1,00,000<br>7 – 10 3 வருட குழுக்கள் – ரூ. 1,25,000<br>10 வருடத்திற்கு மேல் உள்ள குழுக்கள் – ரூ. 1,50,000 | 10 | |
| 11 | ஊக்குனர் ஆய்வு கூட்டம், உள் தணிக்கை மற்றும் வெளித்தணிக்கை தணிக்கையில் தவறாமல் ஊக்குனர் கலந்து கொண்டு இருத்தல் (ஊக்குனரின் கைரேகை பதிவு செய்திருத்தல்) | 5 | |
| 12 | குழுவில் 18 உறுப்பினர்களுக்கு மேல் இருத்தல்<br>(18 உறுப்பினர்கள் 10 மதிப்பெண், 17 உறுப்பினர்கள் 9 மதிப்பெண்,<br>16 உறுப்பினர்கள் 8 மதிப்பெண், 15 உறுப்பினர்கள் 7 மதிப்பெண்)<br>(15 வருடத்திற்கு மேல் உள்ள குழுக்கள் மட்டும்) | 10 | |
| 13 | அனைத்து உறுப்பினர்களின் தனிநபர் பாஸ் புத்தகம் முறையாக எழுதி<br>(புகைப்படத்துடன்) கொண்டு வந்து இருத்தல் | 5 | |
| | **மொத்த மதிப்பெண்கள்** | 100 | |

| | |
|---|---|
| குழுவின் தரம் | வைரக் குழு "Diamond Group" – above 10 Years (Marks 90–100) |
| | தங்கக் குழு "Gold Group" – above 10 Years (Marks 90–100) |
| | வெள்ளிக் குழு "Silver Group" – 5–7 Years (Marks 90–100) |
| | வெண்கலக் குழு "Bronze Group" – All Groups (Marks 75–89) |
| | வெண்கலக் குழு "Bronze Group" – 1–5 Years (Marks 90–100) |
| | செயல்படாத குழு "D" Group |

**தணிக்கையாளர் பெயர்** **தணிக்கையாளர் கையொப்பம்**

# குழுக்களின் தரநிலை



"வெண்கலக்குழு"



"வெள்ளிக்குழு"



"தங்கக்குழு"



"வைரக்குழு"

| தரம் | குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் | வங்கி கடன் தொகை |
|---|---|---|
| **"வெண்கலக் குழு"** | 5 ஆண்டுகளாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல் திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் | ₹ **10,000** முதல் ₹ **60,000** வரை |
| **"வெள்ளிக் குழு"** | 5 ஆண்டுகளிலிருந்து 7 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ **75,000** வரை |
| **"தங்கக் குழு"** | 7 ஆண்டுகளிலிருந்து 10 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ **1,00,000** வரை |
| **"வைரக் குழு"** | 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குனர் A★ தரநிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ **1,20,000** வரை |

செயல்படாத குழு : (D) இக்குழுக்கள் எவ்வகை கடன்களும் பெற தகுதியற்ற குழுக்கள்

| தரம் | ஊக்குநர்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|
| **A** | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல் கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலின் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் |
| **A*** | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து TAB–ல் கைரேகை பதிவு செய்திருத்தல் கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலின் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் குழுவின் அனைத்து பதிவேடுகளையும் ஊக்குநர் அல்லது குழு உறுப்பினர்களே முறையாக பராமரித்தல் |



# குழுக்களின் கணினிமயமாக்கம்

- குழுவின் அனைத்து செயல்பாடுகளிலும் உறுப்பினர் அனைவரும் கலந்து கொண்டு அவர்கள் கலந்து கொண்டதற்கு அத்தாட்சியாக அவர்களின் கைரேகைகளை TAB–ல் பதிவு செய்யப்படுவது நடைமுறையில் உள்ளது. (குழு கூட்டம் பயிற்சியில் கலந்து கொள்வது, வங்கி கடன் பெறுவது, சங்க கடன், ஐ.வி.டி.பி கடன், இலாப பங்கீடு, ஊக்குனர் ஆய்வு கூட்டம்)

- தற்போது ஐ.வி.டி.பி குழுக்களில் 10265 குழுககளுக்கு நேரடியாக குழு கூட்டம் நடக்கும் இடத்திலேயே உறுப்பினர்களுடைய சேமிப்பு கடன் எடுப்பது, திருப்பி செலுத்துவது போன்றவை TAB–ல் பதிவு செய்யப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு கைரேகை மூலம் பதிவு செய்யும் பணி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

- குழுவின் மூலம் பெற்று அனைத்து கடன்களும் (சுகாதார பொருட்கள், ஐ.வி.டி.பி கடன்கள், சங்க கடன், சிறப்புக் கடன், வங்கி கடன்) குழு கூட்டத்திலேயே உறுதி செய்யப்படுகிறது.

- தற்போது 6000குழுக்களுக்கு மேல் சிறப்பு கடன் மற்றும் ஐ.வி.டி.பி கடனுக்கான TAB–ல் கையொப்பமிடுதல் ஆகியவை தலைமை அலுவலகத்திற்கு வராமல் குழு கூட்டத்திலேயே உறுதி செய்து கிளை அலுவலகம் மூலமே நடைபெற்று வருகிறது.

- அதன் மூலம் குழு உறுப்பினர்களின் நேரம், காலம் மற்றும் போக்குவரத்து செலவுகள் மிச்சப்படுத்தப்படுகிறது.
- குழு கூட்டத்தில் வசூலாகும் தொகை மற்றும் எடுக்கும் தொகை போன்றவை குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் முன்னிலையில் உறுதி செய்து கைரேகை பெறுவது மூலம் உறுப்பினர்கள் நம்பக தன்மையுடனும் மகிழ்ச்சியுடனும் உள்ளனர்.
- குழுவின் அனைத்து நடவடிக்கைகளும் உடனுக்குடன் பதிவு செய்யப்படுவதால் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும், அவர்கள் குடும்பத்தவர்களுக்கும், வங்கிகளுக்கும் குழுவின் மீது அதிக நம்பிக்கை ஏற்படும். அத்துடன் ஐ.வி.டி.பி குழுக்களின் தரமும் உயரும்.
- தொடர்ந்து 6 கூட்டங்களில் ஒருவர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் (மகப்பேறு, அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்காக) குழுவின் தீர்மானத்துடன் அனுமதி வழங்கி TAB–ல் பதிவு செய்யப்படும். இதனால் குழுவை விட்டு பிரித்து விடுவார்களோ என்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை.
- TAB–ல் பதிவு செய்யும் நடைமுறைக்கும் ஐ.வி.டி.பி–யின் கணிணி மையமாக்கும் நடைமுறைக்கும் தேவைப்படும் அனைத்து செலவினங்களையும் ஐ.வி.டி.பி நிர்வாகம் ஏற்றுக் கொள்கிறது. இதற்காக உறுப்பினர்களிடமோ, குழுக்களிடமோ எந்த கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது.



## மகளிர் சுய உதவிக்குழுக்களால் உருவாக்கப்பட்ட
## சட்டத்திட்டங்களுக்கு அவர்களே பொறுப்பேற்கும் ஒப்பந்த கடிதம்

....................ம் வருடம் ........................மாதம் ..................தேதியில் ...............................மாவட்டம் ...............................வட்டம் ..................................கிராமத்தில் இயங்கி வரும் ..................... மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களாகிய நாங்கள் அனைவரும் சேர்ந்து ரேப்படி கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி டவுன், கதவு எண் – 9இ, சாந்தி நகரில் இயங்கி வரும் ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனைத்து சட்ட திட்ட வரையறைக்கு உட்பட்டு, கட்டுப்பட்டு நடப்போம் என உறுதியளித்து, கீழ்வரும் சட்டதிட்ட வரையறைகளை உறுதியாக ஏற்கிறோம்.

1. எங்கள் மகளிர் குழுவில் 12 முதல் 20 வரை உறுப்பினர்களை சேர்ப்போம்.
2. ஒரே கிராமம் (அ) ஒரே பகுதியை சார்ந்த ஏழை மற்றும் வறுமைகோட்டிற்கு கீழே உள்ள 18 முதல் 55 வயதிற்குட்பட்ட உறுப்பினர்களை குழுவில் சேர்த்து சமுதாயம், பொருளாதாரம், மற்றும் சுகாதாரத்திற்காக பாடுபடுவோம். செயல்படுவோம் என உறுதியளிக்கிறோம்.
3. குழு உறுப்பினர்கள் சாதி, மத வேறுபாடு இன்றி மாதத்திற்கு 2 முறை குறித்த நேரத்தில் பொது இடத்தில் தவறாமல் குழு கூட்டங்களில் கலந்துக்கொண்டு சேமிப்பு கணக்கு வைத்துக் கொள்வோம்.
4. ஒரே குடும்பத்தை சார்ந்து ஒருவர் மட்டுமே குழுவில் இருப்போம். எந்த உறுப்பினரும் 2 குழுக்களில் உறுப்பினராக இருக்க மாட்டோம் மற்றும் வேறு எந்த தொண்டு நிறுவனத்திலும் சேர மாட்டோம். மேலும் இதனால் ஏற்படும் குழப்பங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் குழு உறுப்பினர்களாகிய நாங்களே பொறுப்பேற்கிறோம்.
5. குழு கூட்டங்களின் போது வருகை பதிவேடு மற்றும் குழுவின் கணக்கு வழக்குகளை முறையாக பதிவேடுகளில் பதித்து, கையொப்பமிட்டு, உள் தணிக்கை மற்றும் வெளித் தணிக்கைக்கு உட்படுத்துவோம்.
6. குழுவில் உள்ள உறுப்பினர்களாகிய நாங்களோ (அ) எங்கள் குழுவோ விலகினாலும் (அ) வேறு தொண்டு நிறுவனத்தில் சேர்ந்து செயல்பட நினைத்தாலோ ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனத்தின் மூலம் பெற்ற கடன்களை முழுமையாக செலுத்திவிடுவோம் என உறுதியளிக்கிறோம்.
7. குழுக்களின் மூலம் கடன் பெறும் உறுப்பினர்கள் தவணை தவறாமல் திரும்ப செலுத்துவோம். குழுவில் ஏற்படும் இலாப, நஷ்டம் எதுவாயினும் குழுவே பொறுப்பாகும். மேலும் கடன் வசூலுக்கு சட்ட விரோதமான வழிகளை கடைபிடிக்க மாட்டோம். இதற்கு தொண்டு நிறுவனம் பொறுப்பல்ல குழுவே முழு பொறுப்பாகும்.
8. குழு உறுப்பினர்கள் யாரும் தன் பெயரில் குழு மூலம் கடன் பெற்று அடுத்தவர்களுக்கு கொடுக்க மாட்டோம். மேலும், ஏதேனும் தவறும் நடந்தால் குழு உறுப்பினர்களாகிய நாங்களே முழு பொறுப்பு ஆகும். இதற்கு தொண்டு நிறுவனம் பொறுப்பல்ல. சங்க கடன் மூலம் பெறக்கூடிய வட்டியிலிருந்து குழுவின் செலவுகள் போக மீதம் உள்ள தொகையை சேமிப்பு விகிதாச்சாரப்படி தகுந்த கால இடைவெளியில் இலாபமாக பிரித்துக் கொள்வோம்.
9. குழு கூட்டத்தில் வசூலாகும் அனைத்து தொகையையும் அன்றோ (அ) மறுநாளோ ரொக்கமாக வங்கியில் செலுத்திய பின் கடன் தொகையை பெற்றுக் கொள்வோம்.
10. குழுவின் சட்ட திட்டங்களை சரிவர கடைபிடிக்காதவர் மற்றும் மீறி நடக்கும் உறுப்பினரை குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையான தீர்மானத்தின்படி விலக நடவடிக்கை மேற்கொள்வோம்.
11. தொகுதியளவு கூட்டமைப்பு நிர்ணயிக்கும் ஆண்டு சந்தா தொகையை ஆண்டுதோறும் தொகுதியளவு கூட்டமைப்பிற்கு செலுத்துவோம் என உறுதியளிக்கிறோம்.

12. வங்கிக்கு பணத்துடன் போகும்போதோ, வரும்போதோ அல்லது எந்த ஒரு காரணத்திலும் குழுவின் பணத்தை தவறவிட்டால் தவறவிட்ட உறுப்பினரே பொறுப்பேற்று பணத்தை குழுவிற்கு கட்டிவிடுதாக உறுதி ஏற்கிறோம்.

13. வங்கிக்கடன் மற்றும் ஐ.வி.டி.பி. கடன்களுக்காக குழுக்களில் வசூலிக்கப்படும் சேவைக் கட்டணம் கூட்டமைப்பிற்கும், ஐ.வி.டி.பி. மேற்பார்வை கண்காணிப்பு கணக்கிற்கு மாற்றம் செய்ய சம்மதம் தெரிவிக்கிறோம்.

14. வங்கிகடனை பெற்று குழு மூலம் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும்போது வங்கிவட்டி வீதமே வசூலிக்கப்படும். அதிக வட்டி வசூலிக்கமாட்டோம். வங்கிக்கடன் தீர்மானம் செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே வழங்குவோம்.

15. குழுவின் மூலம் பெற்றும் அனைத்து கடன்களையும் தவணை தவறாமல் திருப்பி செலுத்திடுவோம். கட்டத் தவறிய உறுப்பினர் சார்பில் மற்ற அனைத்து உறுப்பினர்களும் பொறுப்பேற்று கட்டிவிடுவோம்.

16. இடையில் குழுவை விட்டு உறுப்பினராகிய நாங்கள் விலகினால் முழுகடனையும் திருப்பி செலுத்திவிட்டு சேமித்த தொகையை பெற்றுக்கொண்டு விலகுவோம்.

17. குழு உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய எல்லாவித கடன் தவணை தொகையையும் தவறாமல் செலுத்துவோம். தவறும் பட்சத்தில் தொகுதியளவு கூட்டமைப்பு தீர்மானத்தின்படி வங்கிக்கணக்கை நிறுத்தி வைக்க தொகுதியளவு கூட்டமைப்பிற்கும், ஐ.வி.டி.பி.–க்கும் உரிமை உள்ளது என சம்மதம் தெரிவித்துக் கொள்கிறோம்.

18. தொகுதியளவு கூட்டமைப்பு மூலம் நடத்தப்படும் வாழ்க்கை பாதுகாப்பு நிதி திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்து வருட வருடம் புதுப்பித்துக் கொள்ள ஏகமனதாக சம்மதிக்கிறோம்.

19. குழு எக்காலத்திலும் அரசியல் சார்ந்த செயல்களில் ஈடுபடாது. மேலும் அரசாங்ககத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடாது என உறுதியளிக்கிறோம்.

20. ஐ.வி.டி.பி.யால் அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட எங்கள் குழு அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுவானது. எந்த ஒரு தனி நபருக்கோ, எந்த நிறுவனத்திற்கோ, அமைப்பிற்கோ சொந்தமல்ல. முழுக்க முழுக்க குழு உறுப்பினர்களான எங்களுக்கு மட்டுமே சொந்தமானது என உறுதியளிக்கிறோம்.

21. இனி இவைகளின்றி அந்தந்த நேரத்தில் குழுவின் நலன், உறுப்பினர் மேம்பாடு கருதி ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் நல்ல முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு நடப்போம் என இதன்மூலம் உறுதி கூறுகிறோம்.

| உறுப்பினர்களின் கையொப்பம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | பெயர் | கையொப்பம் | வ.எண் | பெயர் | கையொப்பம் |
| 1 | | | 11 | | |
| 2 | | | 12 | | |
| 3 | | | 13 | | |
| 4 | | | 14 | | |
| 5 | | | 15 | | |
| 6 | | | 16 | | |
| 7 | | | 17 | | |
| 8 | | | 18 | | |
| 9 | | | 19 | | |
| 10 | | | 20 | | |

# அத்தியாயம்

## 03

# ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொகுதியளவு கூட்டமைப்பு

சுயசார்புடைய மகளிர் சுய உதவிக்குழுக்களின் தொகுதியளவு கூட்டமைப்பு என்பது ஐ.வி.டி.பி. நிறுவனத்திற்கு மட்டுமே உரிய அமைப்பாகும்.

**தொகுதியளவு கூட்டமைப்பு என்பது என்ன?**

ஒற்றுமை உணர்வுடனும், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு தம் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு 200 முதல் 250 ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்த முறைசாரா அமைப்பே தொகுதியளவு கூட்டமைப்பு ஆகும்.

**தொகுதியளவு கூட்டமைப்பின் நோக்கங்கள்**

- புதிய குழுக்கள் உருவாக்கி அவற்றை வலுப்படுத்துதல்
- சாதி, மத, இன பாகுபாடு பார்க்கமால் அரசியல் குறுக்கீடு இல்லாமல் ஒன்றுபட்டு செயல்படுதல்.
- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழுக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பாடுபடுதல்.

**தொகுதியளவு கூட்டமைப்பின் முக்கியத்துவம்**

- தொகுதியளவு கூட்டமைப்பு குழுக்களை மேற்பார்வையிடுகின்றது.
- தொகுதியளவு கூட்டமைப்பு குழுக்கள் இடையே நல்லெண்ணத்தை உருவாக்குகிறது.
- குழுக்கள் தம்மைத் தாமே நடத்திக் கொள்ள பயிற்சி வழங்குகிறது.
- குழு உறுப்பினர்கள் தம்முடைய தேவைகள், உணர்வுகள், அனுபவங்கள் மற்றும் தம் சுய விபரங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

ஒவ்வொரு தொகுதியளவு கூட்டமைப்பும் அதற்கென்று துணை விதிகளை வைத்துள்ளது. ஒரு தொகுதியளவு கூட்டமைக்குட்பட்ட அனைத்து குழு ஊக்குனர்களும் சேர்ந்தது தொகுதியளவு கூட்டமைப்பின் பொதுக்குழு ஆகும். இந்த பொதுக்குழு தான் துணைவிதிகளை உருவாக்குகிறது மற்றும் தேவைக்கேற்ப அமைக்கிறது. பொதுக்குழு 5 அல்லது 7 பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து செயற்குழுவை உருவாக்குகிறது. இந்த செயற்குழுவின் காலம் ஓராண்டு மட்டும். தொகுதியளவு கூட்டமைப்பு கணக்கை கையாள செயற்குழு 2 பிரதிநிதிகள், ஒரு கௌரவத் தலைவர், ஒரு செயலர் என்றும் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்கள் முறையாக செயல்படாதபோது செயற்குழுக்கூட்டத்தில் அந்தந்த மாத நிதிநிலை அறிக்கை, செயல் திட்டங்கள், ஐ.வி.டி.பி.யின் புதிய திட்டங்கள் ஆகியவை கலந்தாய்வு செய்து உரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

# தொகுதியளவு கூட்டமைப்பின் சேவைகள், பணிகள்

- புதிய குழுக்களை உருவாக்குகிறது.
- இருக்கின்ற குழுக்களை வலுப்படுத்துகின்றது.
- ஐ.வி.டி.பி. வழிகாட்டுதலின்படி தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்களை நியமனம் செய்கிறது.
- குழுக்கூட்டம் முடிந்தவுடன் குழுவின் வரவுசெலவு கணக்குகளுடன் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்திற்கு செல்லவேண்டும். கணக்குகள் சரிபார்த்த பிறகுதான் வங்கிகளுக்கு செல்ல வேண்டும்.
- தரம் நிர்ணயித்தல் மற்றும் வங்கிகளுடன் இணைப்பு ஆகியவை நடைபெறுகிறது.
- உள் தணிக்கை, வெளித்தணிக்கை ஏற்பாடு செய்யப்படுகின்றது.
- குழுப் பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்வு காண ஏற்பாடு செய்யப்படுகிறது.
- சுகாதாரம், சமூகப் பிரச்சனைகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல்.
- தேவையான பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் அனைத்து வகைகளிலும் குழுக்களை மேம்படுத்துதல்.
- இலாபப்பங்கீடு, வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி மற்றும் பல நலத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல்.
- வரவு செலவு கணக்கு புத்தகங்கள் மற்றுமுள்ள ஆவணங்களை சரிபார்த்தல்.

**தொகுதியளவு கூட்டமைப்பு கூட்டங்கள்**

- குறிப்பிட்ட தேதியில் மட்டும் ஒவ்வொரு மாதமும் தொகுதியளவு கூட்டமைப்புக் கூட்டம் நடைபெறும்.
- ஒவ்வொரு கூட்டத்திலும் குறைந்தது 2/3 பகுதி பிரதிநிதிகளின் வருகை பதிவு செய்யப்பட வேண்டும்.
- இந்த கூட்டத்தில் செயல்முறைகளை பற்றி ஊக்குனர் ஆய்வு கூட்டங்களில் விளக்கமளிக்க வேண்டும்.
- இந்த தொகுதியளவு கூட்டமைப்பு தீர்மானங்களை வேகமாக செயல்படுத்த வேண்டும்.

# தொகுதியளவு கூட்டமைப்பின் நிதி நிர்வாகம்

**A.** தொகுதியளவு கூட்டமைப்பு தனது நிதி ஆதாரத்தை சுய உதவிக்குழுகளிடமிருந்து பெறுகிறது. ஐ.வி.டி.பி.யின் மேற்பார்வையில் இந்த நிதியை மிகவும் கவனமாக பயன்படுத்துகிறது.

- தொகுதியளவு கூட்டமைப்பின் நிதி ஆதாரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

1. ஆண்டு சந்தா
2. குழு பங்களிப்பு
3. பயிற்சிக் கட்டணம்,
4. ஐ.வி.டி.பி. உதவி

**B.** செலவினங்கள்

- பணியாளர் ஊதியம், பயணப்படி, பணியாளர் ஊக்க ஊதியம், குழுக்கள் மற்றும் பணியாளர் பயிற்சி செலவுகள், தணிக்கை செலவுகள், ஐ.வி.டி.பி. மேற்பார்வை செலவினத்தை பகிர்ந்து கொள்ளுதல், அமைப்பு நிறுவுதல் / செலவுகள்

**C.** பதிவேடுகள்

- வருகைப்பதிவேடு, தீர்மானநோட்டு வங்கிக்கணக்கு புத்தகம் ரசீது புத்தகம், பார்வையாளர் பதிவேடு, வாகன பராமரிப்பு பதிவேடு, வரவு சார்ந்த ரொக்கப் பதிவேடு, இருப்புப் பதிவேடு, தபால் போக்குவரத்து கோப்பு, குழுக்கடன் பதிவேடு, பணியாளர் நகர்வுப் பதிவேடு.

**D.** பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் தணிக்கை

- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்கள் அனைத்து பதிவேடுகளையும் பராமரித்து வருகிறார்கள்.
- மாத இறுதியில் செயற்குழுக்கூட்டம் நடைபெறுகிறது. அனைத்து ஆவணங்கள் பதிவேடுகள், வரவு செலவு ஆகியவற்றை ஆய்வு செய்து உரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகிறது.
- மாதம் ஒருமுறை வரவு செலவு பதிவேடுகளை தலைமை அலுவலகத்தில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் அப்பகுதி மேற்பார்வையாளர் ஆய்வு/செய்கின்றனர்.
- இறுதியாக இவை ஐ.வி.டி.பி. தலைவர் அவர்களுடைய பார்வைக்கு அனுப்பப்படுகிறது.
- பிறகு ஐ.வி.டி.பி. தலைவர் ஆவணங்களில் கையொப்பமிடுகிறார்.
- அனைத்து ஆவணங்களையும் 3 மாதத்திற்கு ஒருமுறை தலைமை அலுவலகக் கணக்காளர் தணிக்கை செய்கிறார்.
- அனைத்து ஆவணங்களும் ஆண்டிற்கு ஒருமுறை வெளித்தணிக்கை அலுவலர் ஒருவரால் தணிக்கை செய்யப்படுகிறது. (By private Chartered Accountant)

அத்தியாயம்

04

# சுய உதவிக் குழுக்களின் சிறப்பம்சங்கள்



சுய உதவிக்குழுக்கள் வளர்ச்சிக்காகவும், உறுப்பினர்கள் நலன் கருதியும் ஐ.வி.டி.பி. நிறுவனமே பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**அந்த திட்டங்களுள் சில...**

1. குழு வைப்புநிதி
2. இலாபப் பங்கீடு
3. வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

# குழு வைப்பு நிதி

- ஒவ்வொரு குழுவும் ஆரம்பித்து இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்குள், தன்னுடைய மொத்த சேமிப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதியை வங்கியில் குழு வைப்புநிதியாக வைக்க வேண்டும்.

**நோக்கங்கள்**

- வங்கிக்கடன் பெற குழு வைப்புநிதி ஒரு உத்திரவாதமாக பயன்படுகிறது.
- குழு எதிர்பாராத சூழ்நிலைகளில் இந்த நிதியைப் பயன்படுத்தலாம்.
- சிறப்புக்கடன் வழங்க தகுதி பெறுகிறது.

**தேவைகள்**

- 2–3 ஆண்டுகள் ஆன குழுக்கள் ரூ.25,000 குழு வைப்புநிதி செய்ய வேண்டும்.
- 4–5 ஆண்டுகள் ஆன குழுக்கள் ரூ. 50,000
- 5–7 ஆண்டுகள் ஆன குழுக்கள் ரூ. 75,000
- 8–10 ஆண்டுகள் ஆன குழுக்கள் ரூ. 1,00,000 – ரூ. 1,25,000
- 10 ஆண்டுகளுக்கு மேல் ஆன குழுக்கள் ரூ. 1,50,000
- குழு வைப்பு நிதி விவரங்கள் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும்.
- குழு வைப்பு நிதி கணக்கின் நகல் குழுவிலும் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்திலும் பாதுகாக்கப்பட்ட வேண்டும்.
- குழு வைப்புநிதி (டெபாசிட்) அசல் பத்திரம் ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

**குழு வைப்பு நிதியை எவ்வாறு ஏற்படுத்துவது?**

- அலுவலகப் பணியாளர்கள் குழுக்களின் வயதுக்கேற்ப வைப்பு நிதி தொகையை நிர்ணயம் செய்கிறார்கள்.
- அவர்கள் குழுவில் இருக்கும் சேமிப்புத் தொகையை சரிபார்க்கிறார்கள்.
- குழு வைப்பு நிதி ஏற்படுத்த குழுதீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
- குழு சேமிப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை எடுத்து நிரந்தர குழு வைப்புநிதியாக ஒதுக்கி வைக்கப்படுகிறது.

**குழு வைப்பு நிதியின் முக்கியத்துவம்**

- குழு செலுத்த வேண்டிய அல்லது வசூலாகாத, செலுத்தப்படாமல் உள்ள தொகை கருத்தில் கொள்ள வேண்டும்.
- குழு வைப்பு நிதி உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்க குழுத்தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதை ஐ.வி.டி.பி. தலைவரின் ஒப்புதலுக்கு சமர்பிக்க வேண்டும்.
- இனிவரும் காலங்களில் வங்கிக்கடன் தேவையில்லை என்று குழுத்தீர்மானம் நிறைவேற்றும் பட்சத்தில் வைப்புநிதி பத்திரம் கணக்கு முடித்து குழு கணக்கில் செலுத்தி சங்கக் கடன் வழங்க பயன்படுத்தலாம்.
- குழுவில் பிரச்சனைகள் அதிக அளவில் உருவாகும்போது குழு வைப்புநிதியை எடுத்து குழு செலுத்த வேண்டிய பல்வேறு கடன் நிலுவைகளைத் தீர்க்கலாம்.
- அனைத்து வகை கடன் நிலுவைகளையும் திருப்பிச் செலுத்திய பின் மீதியிருக்கும் வைப்புநிதி தொகையை உறுப்பினர்கள் பிரித்து எடுத்துக் கொள்ளலாம்.

# இலாபப் பங்கீடு

சங்க உறுப்பினர்களின் மொத்த சேமிப்புத் தொகை உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையில் குறைந்த வட்டி விகிதத்தில் உள் கடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் வரும் வட்டித் தொகையிலிருந்து செலவுகளைக் கழித்து மீதமுள்ள தொகையை இலாபப் பங்கீடாக உறுப்பினர்களுக்கு, அவர்களின் தனிநபர் சேமிப்புக்கு தகுந்தாற்போல் பிரித்து வழங்கப்படுகிறது.

மேலும் முதல் இலாபப் பங்கீடு குழு ஆரம்பித்து 5 வருடத்திற்கு பிறகு வழங்கப்படுகிறது. அதற்கு பின் 2 வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும்.

**சிறப்பு அம்சங்கள்**

- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்களின் சேமிப்பு மற்றும் கடன் செயல்பாடுகளில் இது ஒரு தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும்.
- உறுப்பினர்களின் கடின உழைப்பால் ஈட்டிய சேமிப்பு இறுதியில் நல்ல பலனை கொடுக்கிறது.
- இதனால் ஐ.வி.டி.பி. சுய உதவி குழுவில் இருப்பதை உறுப்பினர்கள் பாதுகாப்பாக கருதுகின்றனர்.

**ஒரு புதிய உறுப்பினர் சுய உதவிக்குழுவில் இடையில் சேர்ந்தால் இலாபப் பங்கீடு பெற நிபந்தனை**

- புதியதாகச் சேர்ந்த உறுப்பினர் சங்கத்தில் சேர்ந்து ஒரு ஆண்டு முடிந்திருக்க வேண்டும்.
- புதியதாகச் சேர்ந்த உறுப்பினருக்கு இலாபப் பங்கீடு வழங்க மற்ற உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

**இலாபப் பங்கீடு கணக்கிடுவது எவ்வாறு?**

- இலாபப் பங்கீடு பிரிப்பதற்கு 4 அல்லது 5 மாதங்களுக்கு முன்பு சங்கக் கடன் மற்றும் சிறப்புக் கடன் வழங்குவதை நிறுத்தி வங்கியில் இருப்பு வைக்க வேண்டும்.
- இலாபப் பங்கீடு வழங்குவதற்கு குழு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு தொகுதியளவு கூட்டமைப்பும், ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகமும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கும் உறுப்பினருக்கும் இலாபப்பங்கீட்டுத் தொகை கணக்கிடுவதற்கு ஐ.வி.டி.பி. ஒரு குழு அமைத்து கணக்கிட்ட விவரம் தீர்மான நோட்டில் பதியப்படுகிறது. இந்த தொகையை உறுப்பினர்கள் இலாபப் பங்கீடாக பெற்றுக் கொள்கிறார்கள்.

**இலாபப் பங்கீடு கணக்கிடுதல்**

- கீழ்க்கண்ட இரண்டு முறைகளில் இலாபப் பங்கீட்டில் குழுவின் பங்கு கணக்கிடலாம்.

முறை –1

1. குழுவின் மொத்த இலாபப் பங்கீடு கண்டு பிடிக்க வாய்ப்பாடு

   வாய்ப்பாடு = A–B=C

   A = குழுவின் சொத்து

   B = குழுவின் முதலீடு (சேமிப்பு)

   C = குழுவின் மொத்த இலாபப் பங்கீடு

| சொத்து | கடன் (அ) குழு செலுத்த வேண்டியது |
|---|---|
| 1. சங்க + சிறப்பு கடன் நிலுவை தொகை | 1. மொத்த சேமிப்பு |
| 2. குழு வைப்பு நிதி (Deposit) | 2. குழு பங்களிப்பு நிதி |
| 3. வங்கி இருப்பு | 3. வாழ்க்கை பாதுகாப்பு நிதி |
| 4. வாழ்க்கை பாதுகாப்பு நிதி | 4. வங்கி கடன் மாற்றம் செய்யப்பட வேண்டியது. |
| 5. வங்கிக் கடன் தொகை | 5. ஐ.வி.டி.பி. கடன் தொகை மற்றும் செய்யப்பட வேண்டியது. |
| 6. ஐ.வி.டி.பி. கடன் தொகை வசூலாக வேண்டியது. | |

- குழுவின் மொத்த இலாபப் பங்கீட்டில் உறுப்பினர் இலாபப் பங்கு கண்டு பிடிக்க வாய்ப்பாடு
- D = C / குழுவின் மொத்த சேமிப்பு
- இங்கு நாம் புள்ளி மதிப்பு அல்லது சராசரி பெறுகிறோம்.
- ஒவ்வொரு உறுப்பினரின் இலாபப் பங்கீட்டில் பங்கு கணக்கிடுதல்
- Dx உறுப்பினர் சேமிப்பு = ஒரு உறுப்பினரின் இலாபப் பங்கீடு

முறை – 2

வாய்ப்பாடு = A–B=C

A = குழுவின் வருவாய்

B = செலவினம்

C = குழுவின் மொத்த லாபம் பங்கீடு

| வட்டி வரவு | செலவினங்கள் |
|---|---|
| 1. சங்கக் கடன் வட்டி | 1. வங்கி சேவை கட்டணம் |
| 2. சிறப்புக் கடன் வட்டி | 2. குழு கண்காணிப்பு நிதி |
| 3. வங்கி வட்டி | 3. ஆண்டு சந்தா |
| 4. வைப்பு நிதி | 4. எழுது பொருட்கள் |
| | 5. பயிற்சிக் கட்டணம் |
| | 6. தணிக்கை கட்டணம் |

**மார்ச் 2020 நிலவரப்படி ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாக ரூ. 589 கோடியை இலாபப் பங்கீடாக பெற்றுள்ளனர்.**



# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

**வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி என்றால் என்ன?**

ஒரு தொகுதியளவு கூட்டமைப்பில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தம் ஒற்றுமை உணர்வு மற்றும் கருணை உள்ளத்தைக் காட்டும் வகையில் ஒரு சிறு தொகையை ஆண்டு சந்தாவாக செலுத்துவதன் மூலம் மறைந்த ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவி குழு உறுப்பினரின் குடும்பத்தாருக்கு வழங்கும் நிதியுதவி வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி ஆகும்.

- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குடும்பம் மற்றும் குழுவின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட நிதியே வாழ்க்கை பாதுகாப்பு நிதி திட்டமாகும்.
- இது ஒரு காப்பீட்டுத் திட்டமாகும்.
- ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர் இறக்கும்போது அல்லது விபத்தினால் நிரந்தர உடல் ஊனமடையும் போது இந்த திட்டத்தின் மூலம் நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது.
- 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இந்த திட்டம் செயல்பட்டு வருகிறது.
- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே இந்த திட்டம் பொருந்தும்.
- இந்த திட்டத்தில் முதலில் இணையும் ஒரு உறுப்பினர் நுழைவுக் கட்டணமாக ரூ. 100 செலுத்த வேண்டும்.
- பிறகு இத்தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ஐ.வி.டி.பி. கண்காணிப்பு மற்றும் வளர்ச்சி கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை இயற்கை மரணம் மற்றும் விபத்தினால் நிரந்தர உடல் ஊனம் ஏற்படும் உறுப்பினர்களின் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இறுதியில் இயற்கை மரணமுற்றவர் குடும்பத்தாருக்கும், ஊனமுற்ற உறுப்பினருக்கும் பாதுகாப்பு நிதி வழங்கப்படுகிறது.
- இயற்கை மரணத்திற்கு ரூ.50,000மும், விபத்தினால் நிரந்தர உடல் ஊனம் ஏற்படும்போது ரூ.25,000மும் வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது.

- ஒரு உறுப்பினர் இறக்கும்போது கடன் தவணை நிலுவை இருந்து அவருடைய வாரிசும் அதைக்கட்டத் தவறினால் இந்த நிதியிலிருந்து கடன் தொகை பிடித்துக் கொள்ளப்படும்.
- வங்கிகளுக்கு உறுப்பினர்கள் மீது நம்பிக்கை ஏற்படுகிறது.
- இறந்த உறுப்பினர் குடும்பத்தாருடன் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்கள் ஒற்றுமை உணர்வை பகிர்ந்து கொள்கிறார்கள்.
- மூன்றாண்டு நிறைவு பெற்ற குழுக்களில் ஒரு உறுப்பினர் இறந்துவிட்டால், அந்த குடும்பத்திற்கு குழுவின் இலாப பணத்தில் இருந்து ஈம சடங்குக்காக ரூ. 5,000 வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

**பொதுவான நிபந்தனைகள்**

- இந்த திட்டத்தில் முதலில் சேரும் உறுப்பினர் நுழைவுச் சந்தாவாக ரூ. 100 செலுத்த வேண்டும்.
- ஒவ்வொரு ஆண்டும் இந்த திட்டத்தில் வழங்க வேண்டிய மொத்த வாழ்க்கைப் பாதுகாப்பு நிதித் தொகையை இந்தத்திட்டத்தில் சேர்ந்துள்ள அனைத்து உறுப்பினர்களும் சமமாக பகிர்ந்து வழங்குகின்றனர்.
- தொடரும் ஆண்டில் இழப்பீட்டிற்கு பின் நிலுவையில் இருக்கும் நிதிக்கேற்ப சந்தா கட்ட வேண்டும்.
- அந்த வருடம் இறந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமானால் வசூலிக்கப்படும் இழப்பீடு சந்தா தொகை அதிகமாகும். (அ) பாதுகாப்பு நிதி சந்தா தொகை சமமாக பிரித்து வழங்கப்படும்.

**ஆவணங்கள்**

- குழு தீர்மானம், இறப்பு சான்றிதழ், தனி நபர் சேமிப்பு புத்தகம், ரேசன் கார்டு, வாரிசுதாரர் போட்டோ, வாரிசுதாரர் ஆதார் ஜெராக்ஸ், இறந்த உறுப்பினர் போட்டோ, தொகுதியளவு கூட்டமைப்பு தீர்மானம்.

**வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி பெற நிபந்தனைகள்**

- அனைத்து குழு உறுப்பினர்களும் ஆண்டு சந்தா செலுத்தியிருக்க வேண்டும்.
- இறப்புச் சான்றிதழ் முன்னிலைப்படுத்த வேண்டும்.
- இயற்கை மரணம் மட்டுமே இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.
- தற்கொலை இறப்பு இந்த திட்டத்தில் சேர்க்கப்பட மாட்டாது.
- குழுவை விட்டு விலகி சென்றவர் இறந்தால் அல்லது உடல் ஊனமுற்றால் அந்த ஆண்டு சந்தா செலுத்தியிருந்தாலும் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி பெற முடியாது.
- ஒரு உறுப்பினர் சந்தா தொகை செலுத்திருந்தாலும் தொடர்ந்து குழுவிற்கு வரவில்லை என்றால் வாழ்க்கை பாதுகாப்பு நிதி கிடைக்காது.
- இறந்த உறுப்பினர் யார் பெயரை தனது வாரிசு என குறிப்பிட்டுள்ளாரோ அவர்தான் வாழ்க்கை பாதுகாப்பு நிதி பெற தகுதி உடையவர்.
- குழுத் தீர்மானம் மற்றும் அதற்கான ஆவணங்கள் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.
- இறந்த உறுப்பினர் கடன் நிலுவை ஏதேனும் இருப்பின் இந்த நிதியிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு மீதம் உள்ள தொகை வாரிசுதாரரிடம் ஒப்படைக்கப்படும்.

# சுய உதவிக்குழுக்கள் உறுதிமொழி

1. நாம் அனைவரும் சாதி மத வேறுபாடின்றி சுய உதவிக்குழு என்ற யுக்தியை பயன்படுத்தி நம்மை நாமே முன்னேற்றிக்கொள்ள கடினமாக உழைப்போம்.
2. நாம் அனைவரும் சிக்கனமாக செலவு செய்து அதிக சேமிப்புடன் பொதுப்பணத்தை பெருக்கி அதிலிருந்து கடன் பெற்று குடும்ப முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவோம்.
3. நாம் அனைவரும் இளம் வயது மற்றும் கட்டாய திருமணத்தை தடுத்து நிறுத்துவோம்.
4. நாம் அனைவரும் சங்கத்தின் நிதி நிலைமைகளை அறிவோம். மேலும் சங்க கடன், வங்கி கடன் மற்றும் ஐ.வி.டி.பி. கடன்களை தவணை தவறாமல் செலுத்துவோம்.
5. நாம் அனைவரும் நிறுவனம் நடத்தும் பயிற்சிகளில் தவறாமல் கலந்து கொள்வோம்.
6. நாம் அனைவரும் நமது சங்கத்தின் மூலமாக பெண் சிசுக்கொலை, மது அருந்துதல் மற்றும் வரதட்சணை கொடுமையை ஒற்றுமையுடன் எதிர்ப்போம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு முறையினை பின்பற்றுவோம்.
7. நாம் அனைவரும் நம்முடைய குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி குறைந்தபட்சம் பனிரெண்டாம் வகுப்பு வரை படிக்க வைத்து திறமைகளை வெளிக்கொணர ஊக்குவிப்போம்.
8. நாம் அனைவரும் சுகாதார வாழ்க்கை வாழ நேப்கின், வாட்டர் பில்டர் மற்றும் கழிவறையை பயன்படுத்த ஊக்குவிப்போம்.
9. நம் கிராமம் வளர்ச்சி அடைய நாமே பொறுப்பு என்பதை உணர்ந்து கிராம மேலாண்மை குழுவின் பணிகளில் பங்கேற்போம்.
10. நாம் அனைவரும் மேற்கண்ட உறுதிமொழியை செயல்படுத்தவும் மற்றும் சங்கத்தை நிலைநிறுத்தவும் பாடுபட உளமாற உறுதியளிக்கிறோம்.



# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள்

1. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குழந்தைகளில் கல்வியில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு கோசலை தங்கப் பதக்க விருது
2. குடிசை தீ விபத்து நிவாரண நிதி
3. விதவை உறுப்பினர் குழந்தைகள் கல்லூரிப் படிப்பிற்கு கல்வி உதவித்தொகை

## ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குழந்தைகளில் கல்வியில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு கோசலை தங்கப் பதக்க விருது

- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் குழந்தைகள் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 90%ற்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு தலா ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.
- 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் 5 இடத்தைப் பெறுபவர்களுக்கு தலா ஒரு மடிக்கணினி வழங்கப்படுகிறது.
- 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் ஐந்து இடத்தைப் பெறுபவர்களுக்கு தலா 4 கிராம் தங்க நாணயம் வழங்கப்படுகிறது.




**சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. குழுத்தீர்மானம்
2. குடும்ப அட்டை / ஆதார் அட்டை
3. உறுப்பினர் சேமிப்பு புத்தகம்
4. மதிப்பெண் பட்டியல் நகல்
5. மாணவர் பள்ளியில் படிக்கும் (Bonafide) சான்றிதழ்
6. மாணவர் மற்றும் உறுப்பினர் போட்டோ (பாஸ்போர்ட் சைஸ்)



# குடிசை தீ விபத்து நிவாரண நிதி

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர் வீடு முழுவதும் தீயிற்கு இரையாகும்போது அந்த உறுப்பினருக்கு ஐ.வி.டி.பி. நிவாரண நிதி வழங்குகிறது. இதற்கு குடிசை தீவிபத்து நிவராண நிதி என்று பெயர்

**குடிசை தீவிபத்து நிவாரண நிதி பெற நிபந்தனைகள்**

- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- ஓலை கூரை வீடுகளுக்கு மட்டும் இந்த நிவாரணநிதி வழங்கப்படும்.
- உறுப்பினருக்கு அதைத் தவிர வேறு வீடுகள் இருக்கக்கூடாது.
- தீ விபத்து நடந்த அன்றோ அல்லது அடுத்த நாளோ ஐ.வி.டி.பி. அலுவலகத்திற்கு தகவல் தரவேண்டும்.
- இதற்கு குழுதீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்க வேண்டும்.
- கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கியிருக்க வேண்டும். தீவிபத்து நடந்த 15 நாட்களுக்குள் அரசு வழங்கும் ரூ.5000 பெற்றிருக்க வேண்டும்.
- தீவிபத்து நடந்த அடுத்த நாள் தொகுதியளவு கூட்டமைப்பு அலுவலகப் பணியாளர்கள் மற்றும் முழுநேர கள மேற்பார்வையாளர்கள் சம்பவ இடத்தை பார்வையிட வேண்டும்.

**குடிசை தீவிபத்து நிவாரண நிதி பெற சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

- குழுத்தீர்மானம்
- குழு தனிநபர் சேமிப்பு புத்தக நகல்
- குடும்ப அட்டை / ஆதார் அட்டை நகல்
- அரசு வழங்கும் ரூ. 5000 பெற்றதற்கான கிராம நிர்வாக அலுவலர் சான்று
- பாஸ்போர்ட் அளவு போட்டோ
- தீ விபத்து நடந்த வீட்டின் போட்டோ

இந்த ஆவணங்களை தொகுதியளவு கூட்டமைப்பில் சமர்பிக்க வேண்டும். ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்திலிருந்து ஒரு பணியாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

இறுதியில் ஐ.வி.டி.பி. தலைவர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட உறுப்பினருக்கு நிவாரணநிதி ரூ. 10,000 மற்றும் உறுப்பினருக்கு தேவையான துணிமணிகளை வழங்குவார்.




# விதவை உறுப்பினர் குழந்தைகளுக்கு கல்லூரி கல்வி உதவித் தொகை

- ஐ.வி.டி.பி. மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களில் விதவை உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்லூரிக் கல்விக்கு தலா ரூ. 10,000 கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.
- ஏப்ரல் 2010 முதல் இந்த திட்டம் நடைமுறையில் உள்ளது.
- உறுப்பினர் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.
- உறுப்பினர் ஆதரவற்று, ஏழ்மை நிலையில் இருக்க வேண்டும்.
- உதவித்தொகை பெறுவதற்கு முன்பு உறுப்பினரின் மகன் அல்லது மகள் செமஸ்டர் தேர்வில் எந்த ஒரு பாடத்திலும் தோல்வியுற்றிருக்கக் கூடாது.

**சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. குழுத்தீர்மானம்
2. குடும்ப அட்டை / ஆதார் அட்டை
3. விதவைச் சான்றிதழ்
4. உறுப்பினர் சேமிப்பு புத்தகம்
5. கணவர் இறப்புச் சான்றிதழ்
6. மாணவர் கல்லூரியில் படிக்கும் (Bonafide) சான்றிதழ்
7. மதிப்பெண் பட்டியல் நகல்
8. மாணவர் மற்றும் உறுப்பினர் போட்டோ (பாஸ்போர்ட் சைஸ்)

# ஐ.வி.டி.பி. யின் நலத்திட்டப் பணிகள்

- பெற்றோரை இழந்த கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை
- குடிநீர் மற்றும் சுகாதாரம் : பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட தூய்மை குடிநீர் வழங்க குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் (R.O. Plants)
- கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், அறிவியல் ஆய்வக உபகரணங்கள்
- கணிணிகள் மற்றும் கணிணி ஆய்வகம் உருவாக்குதல்.
- பள்ளி கல்லூரிகளுக்கு Smart Board வகுப்பறைகள் உருவாக்கி வழங்குதல்.
- அடிப்படை வசதிகள் : பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பெஞ்ச், டெஸ்க், இருக்கைகள், மிதி வண்டி, சிறை கைதிகளுக்கு கணிணி ஆய்வகம்.
- தொழுநோயாளிகள், HIV / AIDS இல்லங்களுக்கு சேவை
- ஆதரவற்ற முதியோர் இல்லங்களுக்கு சேவை
- குழந்தைகள் இல்லங்களுக்கு சேவை
- மாணவர்களுக்கு கற்றல் எளிமையாக்க 10ம் வகுப்பு 12 வகுப்பு மாணவர்களுக்கு ‘‘வெற்றி நம் கையில்’’ என்ற வினாவிடை வங்கி அச்சிட்டு வெளியிடுதல்.
- தொகுதியளவு கூட்டமைப்பு பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை
- மகளிர் சுய உதவிக்குழு விதவை உறுப்பினர் குழந்தைகள் கல்வி உதவித்தொகை
- கோட்டையூர் மலைக்கிராம மக்களின் குழந்தைகளுக்கு மெட்ரிகுலேசன் பள்ளி
- ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர் குழந்தைகள் 10 & 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெறும் மாணவர்களுக்கு கோசலை தங்கப் பதக்க விருது.
- இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க கணிணி பயிற்சி மையம், அனுமந்தபுரம்.
- தானே புயல் பேரிடர் நிவாரணம்
- கார்கில் போர் நன்கொடை
- சுனாமி பேரிடர் நிவாரணம்
- குஜராத் பூகம்பம் நன்கொடை
- கேரளா வெள்ள நிவாரண நிதி (ரூ. 1 கோடி)
- கடலூர் வெள்ள நிவாரணமாக 330 வீடுகள்
- நீலகிரி மாவட்ட வெள்ள நிவாரணமாக ரூ. 1.11 கோடி மதிப்பிலான பணிகள்.
- கொரோனா பெருந்தொற்று காலத்தில் உணவுப் பொருட்கள் நிவாரணம்.
- தமிழ்நாடு அரசுக்கு ரூ. 1 கோடி கொரோனா நிவாரணம்.
- கல்லூரி மாணவிகளுக்கான சுய தொழில் திறன் வளர்ப்பு பயிற்சிகள்
- பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊக்கப்பரிசுகள்.
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு புத்தகப்பை, வாட்டர் பாட்டில்கள் போன்ற ஊக்கப் பரிசுகள்.
- பள்ளிகளின் கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள்.
- விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப் பரிசுகள்.

**ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அவ்வப்போது தங்களது நன்கொடை பங்களிப்புகளை வழங்கி பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.**